Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.0

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள்
இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்
INTERNET
மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு
'திருமுருகன் கொம் நெற்'
இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 13 (08.12.2003) திங்கட்கிழமை இதழ்:69

# அரசியல் இழுபறிநிலை தொடர்ந்தால் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படலாம்!

## ஜனாதிபதிக்கு புலிகள் நல்லவர்களாகி விட்டார்களாம்!

.(கொழும்பு)

பாதுகாப்பமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றதன் பின்னர் விடுதலைப் புலிகள் - அவருக்கு நல்லவர்களாக மாறிவிட்டார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண.

கண்டியில் நேற்று இடம்பெற்ற தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பான அரசியல் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர், அங்கு உரையாற்றியபோது மேலும் தெரிவித்தாவது,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசாங்கத்துக்கும் - ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் இழுபறிநிலைக்கு முடிவு எட்டப்படாது விட்டால், மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

குருநாகலில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது,

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பறித்தெடுத்ததை அடுத்து அரசியல் நெருக்கடி நிலை ஏற்பட்டது.

கடந்த மாதம் மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்றதன் பின், சமாதான செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. சமாதான முயற்சிகளுக்கான பொறுப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி பலகல்ல இந்தியாவுக்கு விஜயம்!

(கொழும்பு)

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல நேற்று மாலை 4.00 மணியளவில் இந்தியா பயணமானார். நான்கு நாட்கள் இந்தியாவில் தங்கியிருக்கும் அவர், அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் உட்பட படைத்துறை அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவிவரும் பாதுகாப்பு முனைப்புக்கள் தொடர்ந்தும் பேணப்படவேண்டும் என்பதில் இரண்டு நாடுகளும் இணக்கம் கண்டுள்ளன.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சையில் கதிர்காமத்தில் குழறுபடி!

(கொழும்பு)

5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையின்போது கதிர்காமம் பகுதியில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. கதிர்காமம் தேசிய கல்லூரியில் இந்த முறைகேடு இடம்பெற்றதாக மாணவர்களும், பெற்றோரும் வெள்ளவாய கல்விவலயத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறிப்பிட்ட கல்லூரியில் நேற்று 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்ற வேளையில் சில மேற்பார்வையாளர்களுடன் பரீட்சை நிலையத்தில் நுழைந்த ஆசிரியர் ஒருவர், மாணவர்களுக்கு வினாத்தாளில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடைகளை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான நடவடிக்கை ஆரம்பிக்காவிட்டால் நாட்டில் மீண்டும் போர் மூளும் அபாயம்!

### அரசை எச்சரிக்கிறது தேசிய சமாதானச் சபை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையே இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு சமாதான சபை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

இந்தச்சபை மேலும் தெரிவித்துள்ளதாவது - விடுதலைப்புலிகளுடனான சமாதான நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக முன்னெடுக்க வேண்டும். அவ்வாறில்லாது காலம் தாழ்த்துவது நாட்டில் மீண்டும் போர் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களை அதிகரிக்கும்.

எனவே, இவ்வாறான ஒரு சூழலைத் தவிர்க்கும் பொருட்டு, சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே சாலச்சிறந்ததென அந்தச்சபை மேலும் அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளது.

## நிறைவேற்று அதிகாரத்தை நீக்க நாடாளுமன்ற உபகுழு அமையும்!

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையை நீக்க நாடாளுமன்றில் உப குழு ஒன்று அமைககப்படவுள்ளது.

தேர்தல் முறையினை மாற்றியமைப்பதற்கான நாடாளுமன்றக் குழுவிடம் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதனை அந்தக் குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மின்சக்தி, எதிபொருள் அமைச்சர் கரு ஜெயசூரிய இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார் எனத் தெரியவருகிறது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம்

(10 ஆம் பக்கம் பார்க்க)




## பிரபாகரனின் மாவீரர் உரையை அஞ்சல் செய்த ரூபவாஹினி கூட்டுத்தாபனம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்குத் திட்டம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் நாள் உரையை நாட்டின் தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினியில் ஒளிபரப்பியமையைக் கண்டித்து, இலங்கை தேசாபிமானிகள் இயக்கம் விரைவில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றினை நடத்தவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கான இடம் மற்றும் திகதிகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாக அந்த அமைப்பின் செயலாளர் சங்கைக்குரிய எல்ல குணவர்த்த தேரர் தெரிவித்தார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை ஜனாதிபதி கையேற்ற பின்னர், தமது அமைப்பு, பல முன்னேற்றங்களை எதிர்பார்த்திருந்தது என்றும் அது தற்சமயம் மோசமான நிலைக்குச் சென்றுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(01)

## விண்ணாணம் விநாசியர்



இந்தப் பரீட்சையிலுமா குழறுபடி...?

## சம்பந்தனை நேரடி விவாதத்துக்கு அழைக்கின்றது சிஹல உறுமய!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனை நேரடி விவாதத்துக்கு வருமாறு சிஹல உறுமய அழைப்பு விடுத்துள்ளது.

1951 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களே 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் வைத்து நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து 1986 ஆம் ஆண்டு திம்புவில் இதனையொத்த தீர்மானமே முன்வைக்கப்பட்டது.

இந்தத் தீர்மானங்களின் அடிப்படையில், வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசம், அதன்மூலம் சிங்களவர்களை அந்தப் பிரதேசத்தின் உரிமை அற்றவர்களாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான தீர்மானங்களுக்கு எதிராகவே விவாதத்துக்கு வருமாறு சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரட்ன இரா.சம்பந்தனுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

## கூட்டணியுடன் விவாதம் நடத்துவதற்கு சிஹல உறுமயவுக்குத் தகுதியில்லை!

### இரா.சம்பந்தன் எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் விவாதம் நடத்துவதற்கு சிஹல உறுமயவுக்கு எவ்வித தகுதியும் இல்லை என அதன் செயலாளர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு தாயகம் எனக்கூறி சிங்களவர்களை அந்தப் பிரதேசத்தில் உரிமையற்றவர்களாக்கி வரும், வட்டுக் கோட்டைத் தீர்மானம், தமிழீழத்தின் மானம் ஆகியவை தொடர்பாக நேரடி விவாதம் நடத்துவதற்கு சிஹல உறுமய அழைப்பு விடுத்திருந்தது.

சிஹல உறுமயவின் இந்த அழைப்புத் தொடர்பாக கூட்டணியின் செயலாளர் நாயகத்திடம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது - சிஹல உறுமயவை சிங்கள மக்களே ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிலையில் வட்டுக்கோட்டைத் தீர்மானம், தமிழீழத் தீர்மானம் பற்றி விவாதம் நடத்த விடுதலைக் கூட்டணியை அழைப்பதற்கு சிஹல உறுமயவுக்குத் தகுதியில்லை எனவும் சம்பந்தன் தெரிவித்தார்.

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1845)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# அதிகாரமுள்ள, அங்கீகாரமுள்ள அரசுடனேயே விடுதலைப் புலிகள் பேச்சுக்களை நடத்த முடியும்!



லண்டனில் - எக்ஸெல் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரையின் முழு விபரமும் வருமாறு -

**த**மிழீழ மக்களே! மீண்டும் இந்த வருடத்தில் எமது மாவீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற கௌரவ நிகழ்விலே பேசவாய்ப்புக்கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

பேச்சை ஆரம்பிக்க முன்னர் நான் ஒன்றைக் கூறவிரும்புகின்றேன். இம்முறை பேச்சில் சந்திரிகா அம்மையாரைக் கிண்டல் பண்ணிப் பகிடிவிடமாட்டன். ஏனெனில் நான் அடுத்த மாதம் வன்னிக்குச் சென்று, தலைவரைச் சந்திக்கவுள்ளேன். பிறகு அம்மாவைப் பகைச்சிட்டுப்போனால் நாலாவதுமாடியில் கொண்டு போய் நாரியை முறிச்சிப்போடுவினம்.

அடுத்த ஒரு விடயம் - சிறிது காலமாக நான் சுகயீனமுற்றிருந்தேன். உங்களுக்குத் தெரியுமோ தெரியாது. சில மாதங்களுக்கு முன்னர் நானும் எனது மனைவியும் வன்னிக்குச் சென்று அங்கு தலைவருடன் சிறிதுகாலம் தங்கியிருந்தபோது, திடீரெனக் கடுமையான சுகயீனம் ஏற்பட்டதனால் தம்பி பிரபாகரன் அவர்களே என்னை அவசரமாக இங்கு அனுப்பிவைத்து, கொஞ்சக்காலம் ஓய்வெடுக்கச் சொன்னார்.

இங்குள்ள எனது வைத்திய நிபுணர்களும் சொன்னார்கள். நீங்கள் விமானப் பயணங்களைத் தவிர்க்கவேண்டும். ஏனென்டு சொன்னால் உங்களின் உடல்நிலை மோசமாக உள்ளது என்று. இதன் அடிப்படையில் நான் கொஞ்சக்காலம் பெட்டில் (**BED**) இருந்தேன். ஆனால் சிறிதுகாலமாக பாலசிங்கத்தின்ரை சிலமனைக் காணயில்லை என்று சனங்கள் கண்டபடி கதைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

சிலபேர் சொன்னார்களாம் பாலசிங்கத்தை இப்ப பொறுப்பிலிருந்து எடுத்தாச்சு என்று. வேறஆக்களைப் போட்டாச்சாம். அப்படி என்று கண்டமாதிரியெல்லாம் வதந்திகள் அடிபடத் தொடங்கியிருக்கு. ஒரு தடவை நான் எனது நண்பர் ஒருவரைச் சந்தித்தபோது .அவர் கேட்டார் என்ன பாலா உமக்கும் தலைவருக்கும் சின்ன ஒரு பிரச்சினை என்று கதைக்கினம், உண்மையோ என்று.

அப்ப நான் சொன்னேன் உண்மை என்று, பாரதூரமானதொரு கொள்கைப் பிரச்சினை என்று. அப்ப அவர் கேட்டார் என்ன பிரச்சினை என்று. நான் சொன்னேன் 25 வருடங்களுக்கு முன்னர், அதாவது நான் இயக்கத்தில் சேருவதற்கு முன்னர் நான் அனுபவித்து வந்த சுதந்திரம் ஒன்றை தலைவர் பறிச்சுப்போட்டார் என்று. அப்போது அவர் ஆச்சரியமாக என்ன சுதந்திரம் என்று கேட்டார். நான் சொன்னன், கள்ளுக் குடிக்கிற சுதந்திரம் என்று. அப்படி வீண்தகவல் அடிபட்டு, சிலபத்திரிகைகளில்கூட இந்தப் பிரச்சனை எழுதப்பட்டது.

அவையின்ரை விசயம் என்னவென்றால்- இது பாலசிங்கம் பிரபாகரன் ஆக்களெல்லாம் ஒரு குடும்பம் மாதிரி. அவர்களுக்குள்ள சில சமயம் ஊடலும்வரும், கூடலும்வரும் என்று.

அப்படியெல்லாம் கதை பரவிக்கொண்டு இருக்கிறநேரம்தான் பிரபாகரன் எனக்கு எடுத்துச் சொன்னார். பாலாண்ணை இங்க இப்படியெல்லாம் கதைகள் பரவுகிறது. நீங்கள் கெதியில மக்கள் களத்தில் இறங்கவேணும். நீங்கள் இன்னும் ஒய்வுபெற்று இயக்கத்தைவிட்டுப்போகேல்ல என்று மக்களுக்குக் காட்டவேணும் என்று சொன்னார். அப்ப நான் சொன்னன் இங்க கள்மொன்று இருக்கு, அப்படியென்றால் மாவீரர் தினம் வருகுது. அதில கட்டாயம் நான் போய்ப்பேசுவன் என்று. நான் இங்க சும்மா வீட்டில் படுத்திருக்கேல்ல. நான் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டிருக்கிறன். நீங்கள் பாத்திருப்பியள் **விடுதலை** என்ற தலைப்பில.

ஆகவே, அவருக்குக் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையிலும் வீண்சந்தேகங்களைத் தீர்க்கவேணும் என்ற அடிப்படையிலும்தான், நான் இப்பொழுது உங்களுக்கு முன்வந்து பேசுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இனி விடயத்திற்கு வருவம். நான் ஒவ்வொரு ஆண்டும் தலைவர் பிரபாகரன் விடுத்த மாவீரர்நாள் செய்திக்கு ஒரு விரிவான விளக்கம் கொடுப்பது வழக்கம். இந்தமுறை முக்கியமான ஒரு செய்தியை தலைவர் வெளியிட்டுள்ளார். அது கடந்த ஒரு ஆண்டு காலமாக நடந்த அரசியல் வரலாற்றை இரத்தினச் சுருக்கமாகத் தன்னுடைய அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்.

அதில் பல விடயங்கள் இருக்கு. ஆகவே, அதற்கு நிச்சயமாக விரிவான ஒரு விளக்கம் கொடுக்கவேண்டியது அவசியம். ஏனென்றால் அதில் அவர் - கொழும்பு அரசியல் நிலைமை, போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தையை எதற்காக நாம் இடைநிறுத்தினோம், அதற்கப்புறம் இடைக்கால நிர்வாக சபைத் திட்டமொன்றை ஏன் முன்வைத்தோம், அதையடுத்து கொழும்பில் பூகம்பமாக ஏற்பட்ட அரசியல் நெருக்கடி, அதன் பின்னணி என்ற ரீதியில் ஒரு தெளிவான சுருக்கமான அறிக்கையை வெளியிட்டிருந்தார். தலைவரின் பேச்சில் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தார், கொழும்பில் ஒரு அரசியல் நெருக்கடி தோன்றியிருக்கு என்று. அது உங்களுக்கும் தெரியும்.

சிங்கள தேசத்தில் அரசாங்கம் என்று சொல்லக்கூடிய ஒரு ஒழுங்கமைவான கட்டமைப்பு இல்லை. ஆட்சி அதிகாரம் பிளவுபட்டு இருக்கிறது. ரணிலுக்கு கீழே இருக்கின்ற நாடாளுமன்ற ஆட்சி ஒருபுறமும், சந்திரிகா அம்மையாரின் கீழ் உள்ள ஜனாதிபதி ஆட்சி இன்னொருபுறமும் என ஆட்சி அதிகாரம் பிளவுபட்டுக் கிடக்கிறது.

இந்த அரசியல் நெருக்கடிக்கு உடனடிக் காரணம் என்னவென்று சொன்னால், சந்திரிகா அம்மையார் மூன்று முக்கிய அமைச்சுக்களை திடீரென்று பறித்துக்கொண்டா. உங்களுக்குத் தெரியும் - பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு, ஊடக அமைச்சு, இந்த மூன்று அமைச்சும் ஆயுதப் படைகளை கட்டுப்படுத்துகின்ற பாதுகாப்பு விவகாரங்கள் சம்பந்தப்பட்ட, பொலிஸ் நிர்வாகம் சம்பந்தப்பட்ட முக்கிய இரண்டு அமைச்சுக்கள் - இதை எடுத்துவிட்டால், ரணிலின் அரசாங்கத்துக்கு அதிகாரவலு உடனடியாகக் குறைந்துவிடும்.

அப்ப என்ன நடந்தது எண்டு சொன்னால், நாங்கள் இடைக்கால நிர்வாகம் என்னும் ஒரு தீர்வுத்திட்டத்தைக் கொடுத்திருந்தோம், இதையடுத்து திடீரென அம்மையார் இந்த முடிவையெடுத்தார். சமாதான சூழல் குழம்பிச்சுது. ரணிலின் அரசாங்கத்துடன் பேசமுடியாத ஒரு சிக்கலான நிலைமை ஏற்பட்டது.

நோர்வே அரசு, அதாவது அனுசரணை முயற்சியில் ஈடுபட்டிருந்த நோர்வே அரசு, திடீரென தனது செயற்பாடுகளை இடைநிறுத்திக்கொண்டதாக அறிந்தோம். அதாவது பேச்சைத் தொடர்ந்துகொண்டு செல்வதற்கான சூழ்நிலை இல்லை. யாரோடுபேசுறது..? பேச்சுவார்த்தை நடக்கவேண்டும் என்றால், முதலாவது பெரும்பான்மை சிங்கள மக்களிடம் இருநதும் ஆணையைப்பெற்ற மனுவைப் பெற்ற ஒரு அரசுடன் பேசவேண்டும். இரண்டாவதாக அந்த அரசாங்கத்திற்கு நிர்வாக அதிகாரம் இருக்கவேண்டும்.

ஏற்கனவே ரணிலுடன் நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, ரணிலுக்கு அப்படிப் பெரிய அதிகாரங்கள் இல்லையென்று எங்களுக்குத் தெரியும். என்றாலும் பாதுகாப்பு, உள்துறை அமைச்சு அவற்ற கட்டுப் பாட்டுக்குள் இருந்ததால அவருடன் பேச நாங்கள் முன்வந்தோம். அவருக்குத்தான் மக்களின்ரை பலமும் இருந்தது.

மற்றது புலிகளுடன் பேசுவேன், புலிகளுக்கு ஒரு இடைக்கால நிர்வாக சபையை அமைத்துக்கொடுப்பேன் என்று, அவர் தேர்தலில் சிங்கள மக்களிடமிருந்து ஆணைபெற்று ஆட்சிக்கு வந்தார். அதனாலதான் அவருடன் பேசினோம்.

அடுத்ததாக போர்நிறுத்த ஒப்பந்தத்திலே பிரபாகரனும், ரணில் விக்கிரமசிங்கவும்தான் கையெழுத்துப் போட்டவை. அப்படியிருக்க திடீரென அவரிடமிருந்த அமைச்சுக்கள் பறிக்கப்பட்டு - அவருடைய ஆட்சி அதிகாரம் வலுக்குறைந்ததன் காரணமாக அவருடன் பேசுவது அர்த்தமற்றதாகிவிட்டது.

இப்ப மூன்று அமைச்சுக்களையும் பறிகொடுத்துவிட்டு வெறுங்கையுடன் நிற்கிறார் ரணில் ஐயா. இனி என்னத்தைப் பறிகொடுக்கப்போகிறாரோ அது கடவுளுக்குத்தான் தெரியும். இந்த நடவடிக்கைக்கு சந்திரிகா அம்மையார் இரண்டு காரணங்களைச் சொல்லுகிறார்.

ஒண்டுவந்து - விடுதலைப் புலிகள் இயக்கம் பெருந்தொகையான ஆட்களைச் சேர்த்து, ஆயுதங்களை வரவழைத்து படைபலத்தைக் கூட்டிப் போருக்குத் தயார் செய்யினம். இது அவவுடைய முதலாவது குற்றச்சாட்டு.

இரண்டாவது குற்றச்சாட்டு என்னென்று சொன்னால் - ரணிலின் அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பெருமளவு ஆயுதங்களை அள்ளிக் கொடுக்கிறது. இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களையும் தலைவர் நிராகரித்துள்ளார்.

நடக்கிற அரசியலைப் பார்த்தால் தெரியும்.

நாங்கள் இராணுவ பலத்தைக் கட்டியெழுப்பி போருக்கு ஆயத்தம் செய்யவில்லை. எமது மக்கள் போரை விரும்பவில்லை. நாங்கள் சமாதான முயற்சியில் உறுதியாக, இறுக்கமாக நிற்கிறோம் என்று அவர் தெளிவாக தனது அறிக்கையில் சொல்லியிருக்கிறார்.

சந்திரிகா அம்மையார் சொல்லியிருக்கிறா- புலிகள் போர்நிறுத்தத்திற்கு முதல் ஒன்பதினாயிரம் வீரர்கள் இருந்தினம். இப்ப இந்தப் போர்நிறுத்தக் காலத்தில் பத்தாயிரம் பேரைச் சேர்த்து, இப்பொழுது பத்தொன்பதினாயிரம் அளவில் படைபலத்தைக் கூட்டியிருக்கினம்.

ஆனால், தலைவர் சொல்லியிருக்கிறார் நாங்கள் ஆட்சேர்ப்பது என்பது உண்மை. எங்கட நிர்வாக அலகுகளுக்கு ஆட்கள் தேவை என்பதால் சிறியளவில் ஆட்களைச் சேர்க்கிறம். ஆனால், படைதிரட்டி யுத்த முஸ்தீபுக்கான வகையில் நாங்கள் போருக்கான ஆயத்தங்களைச் செய்யவில்லை என்று அவர் திடமாகச் சொல்லியிருக்கிறார்.

இப்போது நாங்களெல்லாம் வன்முறையைத் தவிர்க்கிறம். மென்முறைப் பாதையை பின்பற்றுறம். கடந்த இரண்டு வருடமாக ஆத்திரமூட்டும் எந்த நடவடிக்கையையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு சமாதானத்தைப் பேணிவருகிறம்.

உங்களுக்குத் தெரியும் - சிங்களவன் எவ்வளவுதான் ஆத்திரமூட்டினாலும் நாங்கள் சண்டைக்குப்போக விரும்பவில்லை. இப்போது புதிய சமாதான சாதுக்களாக மாறியிருக்கிறம். நீங்கள் கேள்விப்பட்டிருப்பியள். ஆனந்தசங்கரி போன்ற சாரைப் பாம்புகள்கூட இப்ப எங்களுக்கு வால்விட வெளிக்கிட்டினம். அந்தளவுக்கு நாங்கள் பதுமையாக, மெதுமையாக இருக்கிறம்.

சங்கரி ஐயாவுக்கு நாங்கள் ஒன்றைச் சொல்ல விரும்புறம். என்னென்டு சொன்னால்- ஐயா நீங்கள் பயப்படத் தேவையில்லை. முந்தின காலம்மாதிரி நாங்கள் மாலையோட உங்களைத் தேடிவரமாட்டம்.

அடுத்தது ரணிலின் அரசாங்கம் புலிகளுக்கு ஏதோ அள்ளி அள்ளிக் கொடுக்குதாம். இவர் இப்ப என்னத்தைத் தந்துவிட்டார். ரணில ஐயா தன்னட்டை இருந்ததையே சந்திரிகாவிடம் பறிகொடுத்துவிட்டார். இப்ப அவரிட்டை தர்றதுக்கு ஒண்டும் இல்லை. மற்றது தலைவற்றை அறிக்கையில பார்த்திருப்பியள். போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை பற்றி அவர் ஒரு விமர்சனம் வைக்கிறார். இந்த போர்நிறுத்தத்தால் எங்கட மக்களுக்கு உருப்படியான பலனேதும் ஏற்படவில்லையென்று அவர் விளக்கமாக சொல்லுறார்.

ஏனென்டு சொன்னால் - நீங்கள் யாழ்ப்பாணம் போயிருப்பியள். அங்கை என்னத்தைப் பாத்திருப்பியள். அங்க உண்மையான அமைதியோ அல்லது இயல்பு நிலையோ தோன்றவில்லை. அங்க மூலைமுடுக்குகள் எல்லாம், இராணுவம் இடைக்கிடையே வந்து மக்களுக்கு தொல்லை கொடுத்து, மக்களைச் சீண்டிக்கொண்டிருக்கிறது. எத்தனையோ அசம்பாவித சம்பவங்கள் நடந்திருக்குது.

அதாவது தலைவரின் கூற்றுப்படி இந்த போர்நிறுத்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட விதிகள், கடப்பாடுகள் இது ஒண்டையும் இராணுவம் அங்கு நடைமுறைப்படுத்தேல்ல. அப்பிடி இருந்தால் - எங்களது வீடுகள், எங்களது கல்லூரிகள், எங்களது பாடசாலைகள், பொதுக கட்டடங்கள் குடியிருப்புக்களில் இருந்து இராணுவம் வெளியேறி இருக்கலாம். அதற்கான காலவரம்புகள் அந்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இது ஒன்றும் செய்யப்படவில்லை.

இராணுவம் தான்பிடித்த இடங்களில் தொடர்ந்து ஆக்கிரமித்துக்கொண்டிருந்தால், நாங்கள் இந்தப் பேச்சுவார்த்தைகளில், ஒவ்வொருதடவையும் இந்த இராணுவ நிலைகள் பற்றித்தான் கதைக்கிறது. வரை படங்களைக் காட்டி - யாழ்ப்பாணத்தில் மூன்றிலொரு பங்கு பிரதேசத்தை இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

பல்லாயிரக்கனக்கான மக் கள் இன்னும் இடம்பெயர்ந்து தொடர்ந்து அகதிகளாக இருக்கினம். இதுகளுக்கு ஒரு முடிவில்லையா? இதைப் பற்றித்தான் நெடுகிலும் கதைக்கிறது. ஆனால் ரணிலின் பிரதிநிதிகள், அமைச்சர் வாயைமூடிக்கொண்டு கேட்டுக்கொண்டிருப்பினம். அவையளுக்கும் ஒன்றும் செய்யமுடியாது. இராணுவத்தை விலகச் சொல்கிற அதிகாரம் ரணில் ஐயாவிடம் இல்லை.

இராணுவத்தின் பிரதம தளபதியாக அம்மாதான் இருக்கிறார். அம்மா சொல்லாமல் இராணுவம் நகரப்போவதில்லை. அது பாதுகாப்பு வலயம் என்று சொல்லிக்கொண்டிருக்கினம். பாதுகாப்பு வலயம் என்று சொன்னால், அதில் இருந்து விலகினால், இராணுவ சமபலம் தங்களுக்கு சாதகமாக அமைந்துவிடும் என்று சொல்லி இராணுவத் தளபதி பரிசு வழங்கினார்.

அப்ப தலைவர் என்ன சொல்கிறார் என்றால் - எங்களுக்கு ஒண்டுமே தரப்படவில்லை. ஒரு சலுகைகளும் வழங்கப்படவில்லை. போதாக் குறைக்கு நாங்கள் தான் பெரிய இழப்பை சந்தித்து நிக்கிறம். எங்களின் பெரிய இரண்டு வணிகக் கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டன. மீண்டும் படகுகள் தாக்கி அழிக்கப்பட்டன. மீனவப் படகுகள் தாக்கி அழிக்கப்பட்டன.

கடற்புலிப்போராளிகள், மூத்த தளபதிகள் உட்பட 26 போராளிகளை இழந்திருக்கிறம். அப்படி இருக்கவும் நாங்கள் அமைதியைப் பேணிவருகின்றோம் என்று தலைவர் சொல்லுகிறார்.

சந்திரிகா அம்மையார் சொன்னமாதிரி அங்கு தமிழ்மக்களுக்கோ அல்லது புலிகளுக்கோ இந்தச் சலுகைகள் கிடைக்கவில்லை.

ஆனால் திடீரென்று அமைதி நிலவவே, பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. உல்லாசப் பிரயாண தொழிற்துறை முன்னேற்றம்கண்டுவருகின்றது. அங்கயெல்லாம் சந்தோசமாகத் திரிகினம். ஆனால் யாழ்ப்பாணத்து மக்கள் இன்னும் இராணுவத்தின் ஆக்கிரமிப்பின்கீழ் அவதிப்பட்டுக்கொண்டிருக்கினம்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் சொந்த வீடுகளுக்கு திரும்பமுடியாமல் இருக்கினம். ஆகவே இந்தப் போர்நிறுத்தத்தில் என்றாலும்- நாங்கள் போர்நிறுத்தத்தைப் பேணுவோம். அமைதியைக் காப்போம். பொறுமையாக இருப்போம் என்றரீதியில் தலைவர் அடிக்கடி சொல்கிறார்.

இந்தப் பேச்சுவார்த்தை, என்னுடைய தலைமையில்தான் ஆறுசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. சும்மா கோட்டை சூட்டைப் போட்டுக்கொண்டு, நாடுநாடாக அலைந்து ஆறு சுற்றுப் பேச்சுக்கள். அங்கு முதல் பேச்சுவார்த்தையில் நாங்கள் கேட்டோம். புரொபசர் பீரிஸிடம்- நீங்கள் எங்களது மக்களின் பிரச்சினை நிரந்தரத் தீர்வை உங்களது அரசாங்கம் கண்டுவிடும் என்று எதிர்பார்த்தோம், ஆகவே ஒரு இடைக்கால நிர்வாகத்தையாவது தாருங்கள். அப்ப அவர் சொன்னார் - பாலா, அம்மா விடமாட்டா. அரசியல் யாப்புக்குள்ளே இடைக்கால அரசைக்கொண்டு வாறதென்றால் சரியான கஷ்டம். இப்பத்தான் பேச்சுவார்த்தைத் துவக்கிறம். இதை நீ தூக்கிப்பிடித்துக் கொண்டிருந்தால் பேச்சுவார்த்தை முறிந்து அம்மா அரசாங்கத்தை கலைத்துப்போடுவா என்று சொன்னார். இப்போதைக்கு இதை ஒத்திப்போட்டு மக்களின் அவசரப் பிரச்சனைக்கு ஒரு இடைக காலத் தீர்வுகாணவேண்டும். அதற்கான ஒழுங்குகளைச் செய்து மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பம் என்று சொன்னார்.

சரி, இரண்டு பிரச்சனைகளுக்கு வந்தம். ஒன்று இடம்யெர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தி அவர்களுக்கான புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைகளைச் செய்தல்,

அடுத்தது வடபுலத்தில், தமிழர் தாயகத்தில் போர் நெருக்கடியைத் தளர்த்தி ஒரு இயல்பு நிலையைக்கொண்டுவாறது.

அப்ப இந்த முக்கிய விடயங்களுக்கு சப் - கொமிற்றியைப்போட்டு நாங்கள் உடனடியாக உங்களது மக்களுக்கு, பிரச்சனைக்குத் தீர்வுகாண முயற்சிக்கின்றோம் என்று சொல்லிச்சினம்.

சரி அதையாவது செய்யுங்கோ என்று சொல்லி ஆறு சுற்றுப்பேச்சுக்கள் நடந்தது.கொமிற்றிகள் போடப்பட்டது. இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வுக்கென்று ஒரு கொமிற்றியைப் போட்டு, புலிகள் தரப்பில் தமிழ்செல்வனை பொறுப்பாக விட்டம்.

போர்நிறுத்தத்தைத் தணிக்கிறது என்பதற்கு இன்னொரு கமிட்டியைப்போட்டு அதற்குத் தலைவராக கேணல் கருணாவை நியமிச்சம்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

# பொ.ஐ.மு. - ஜே.வி.பி கூட்டணி குறித்து இன்றைய சந்திப்பில் இறுதிமுடிவு!

## டி.எம்.ஜெயரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி குறித்து இறுதிமுடிவு இன்று எடுக்கப்படும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தகவல் தருகையில் -

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏழு அரசியல் கட்சிகளில் ஐந்து கட்சிகள் ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை நடந்த கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் இரண்டு கட்சிகள் தமது முடிவை அறிவிக்கவில்லை. இன்று இந்தக் கட்சிகள் இந்தக் கூட்டணிக்கு ஆதரவளிப்பதா என்பது பற்றி முடிவுசெய்யும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, சிறிலங்கா மக்கள் கட்சி, தேசிய விடுதலை மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளே ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்க ஆதரவு தெரிவித்துள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சி இந்த விடயம் குறித்து முடிவு எடுப்பதற்கு பத்து நாட்கள் கால அவகாசம் கோரியுள்ளது. பட்டி வீரக்கோன் தலைமையிலான லங்கா சமசமாசக் கட்சி - தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தாம் அனுப்பிய கடிதத்துக்கு அவரிடமிருந்து பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும், இந்தப் பதிலைப் பொறுத்தே கூட்டணிக்கு ஆதரவளிப்பதா என்பதைத் தீர்மானிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை ஜே.வி.பியின் மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

இன்று நடைபெறவுள்ள சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும், பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு ஜே.வி.பி அதிக அக்கறையுடன் இருப்பதாகவும், இந்தக் கூட்டணி நாட்டுக்குத் தேவையாகும் எனவும் குறிப்பிட்டார்.

# தலைவர் வழியில் ஒன்றுதிரண்டு உணர்வுடன் உழைக்கவேண்டும்

## மேற்கு கட்டளைப் பணியக கட்டளைத் தளபதி

தமிழ்மக்களாகிய நாம் எமது தலைவர் வழியில் ஒன்றுதிரண்டு எமக்கென்று தாயகம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற உணர்வுடன் எல்லோரும் உழைக்கவேண்டும். அப்போதுதான் நாம் சுதந்திரமாகவும், சுபீட்சத்துடன் வாழமுடியும் என மேற்கு கட்டளைப் பணியகக் கட்டளைத்தளபதி கேணல் ஜெயம் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மக்களின் வாழ்க்கை குறித்து தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்மக்களாகிய நாம் ஓரணியில் இணைந்து பலத்துடன் நிற்கும் பொழுதுதான் எம்மால் எதையும் சாதிக்கமுடியம். எமது தாயகத்தை கட்டிவளர்க்கின்ற பாரிய பொறுப்பு ஒவ்வொரு தமிழ்ப்பிரஜைக்கும் உள்ளது.

எமது பலத்தைக் கட்டியெழுப்பும் போதுதான் எமது தாயகத்தை மீட்க முடியும். மன்னார் மாவட்டத்தில் இருக்கும் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மிகமோசமான பின் தங்கிய நிலையில் வாழ்ந்துவருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கூட்டணியின் மத்திய குழுவை கூட்டுவது சட்டவிரோதமான நடவடிக்கையாகும்!

## ஆனந்தசங்கரி இரா.சம்பந்தனுக்கு கடிதம்

(கொழும்பு)

தலைவருடன் கலந்தாலோசிக்காமல் மத்திய குழுவைக் கூட்டுவது சட்டவிரோதமானது, அமைப்பு விதிகளுக்கும் முரணானது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கட்சியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

அவர் அனுப்பிவைத்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கட்சியின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஊடகங்கள் மூலம் அறிந்துள்ளேன்.

கட்சியின் அமைப்பு விதிகளுக்கு அமைய நடைபெறும் எந்த நிகழ்வு ஆனாலும் கட்சித் தலைவருக்கு தெரியப்படுத்தி அவரின் ஆலோசனையையும், வழிநடத்தலையும் கட்சியின் செயலாளர் நாயகம எந்தக் கூட்டத்தையும் நடத்த முடியும். இதுவே ஆரம்பகாலம் முதல் நடைமுறையிலிருந்து வருகிறது என்றும், ஆனால், தலைவர் இல்லாமல் மத்தியகுழுக் கூட்டத்தை கூட்டுவதும் அதனை நடைமுறைப் படுத்துவதும் அமைப்பு விதிகளுக்கு முரணானது. சட்டவிரோதமானதும், அமைப்பு விதிகளுக்கு முரணானதுமாகும்.

இந்த நிலையில் இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதோ, நடாத்துவதோ தவிர்க்கப்படவேண்டும்.

இந்தக் கூட்டம் கூட்டுவது பற்றி எந்த திகதியில் எந்த இடத்தில் நடத்தப்படவுள்ளது என்பது பற்றியும், தம்முடன் கலந்தாலோசனைகளைப் பெறலாம் என்று கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் தரப்பு ஆலோசனைகள் இம்மாத இறுதிக்குள் தயாரிக்கப்படும்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான முஸ்லிம் தரப்பு ஆலோசனைகள் இம்மாத இறுதிக்குள் தயாரிக்கப்பட்டுவிடுமென, சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்தியாவுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பியவுடன், அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான முஸ்லிம் தரப்பு யோசனைகள் தயாரிக்கப்பட்டவுடன், அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மற்றும் சர்வதேச சமூகத்திற்கும் இந்த ஆலோசனைகள் உடனடியாகச் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் அறியத்தந்துள்ளார்.

இந்தியாவுக்கான தனது விஜயம், இடைக்கால நிர்வாகம் தொடர்பான முஸ்லிம் தரப்பு யோசனைகளைத் தயாரிப்பதற்கு பயனுள்ளதாக அமைந்திருந்தாகவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

# கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் 14ஆம் திகதி திருகோணமலையில்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்குழுக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சுங்க வீதியிலுள்ள கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் திருமலை மாவட்ட தற்போதைய அரசியல் நிலை தொடர்பாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், கட்சியின் தலைவர் தீர்மானம் தொடர்பாகவும் முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

இதேவேளை நேற்றுமுன்தினம் கட்சியின் செயலாளரான சம்பந்தனின் இல்லத்தில், கட்சியின் ஆதரவாளர்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்போதைய நிலை பற்றியும், தற்போதைய அரசியல தொடர்பாகவும் விளக்கம் ஒன்று சம்பந்தனால் அளிக்கப்பட்டது. (04)

# கிண்ணியா வன்செயல் சம்பவங்களால் பாதிப்புக்குள்ளான மக்களை எம்.பிக்கள் பார்வையிட்டனர்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமலை - கிண்ணியா சம்பவங்களால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருந்த தமிழ்மக்களைப் பார்வையிட்டு அவர்களது குறைகளைக் கேட்டறிந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம் ஆகிய இருவரும் தம்பலகாமம் ஊடாக ஆலங்கேணி பிரதேசத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்களை சந்தித்து அவர்களது நிலைமைகளைக் கேட்டறிந்தனர். அப்பகுதியில் அவர்கள் தற்போதைய அனர்த்தம் திருமலை கிண்ணியா தமிழர்களுக்கு மட்டுமான பிரச்சினையல்ல. அனைத்து தமிழர்களுக்குமான பிரச்சினையே இதுவாகும்.

தமிழர் தரப்பில் இந்தச் சம்பவங்கள் தொடர்பாக கேட்பதற்கு ஆட்கள இருக்கிறார்கள் என்பதைக் காட்டவே நாம் இங்கு வந்தோம். மக்கள் பொறுமையாக இருக்கவேண்டுமெனவும் தெரிவித்தனர். அத்துடன் மக்களுக்கான நிவாரணத்தைப் பெற்றுத்தருவதற்கு இவர்களால் உறுதியளிக்கப்பட்டது. இவர்கள் அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் தங்கியிருந்த மக்களையும் சென்று பார்வையிட்டனர். இதேவேளை, நேற்றுமுன்தினம் மாலை நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம் ஆகிய இருவரும் கலைமகள் வித்தியாலயம் சென்று அங்குள்ள மக்களின் நிலைமைகளை பார்வையிட்டனர்.

இதன்பின்னர் இவர்களின் அழைப்பின் பிரகாரம் அங்கு வந்த திருமலை மாவட்ட அரச அதிபர் மற்றும் பட்டணமும், சூழலும் பதில் பிரதேச செயலர் திருமதி ச.ஜனதீபன் ஆகியோர் மக்களின் நிலைமைகளைப் பார்வையிட்டனர். இதன்போது இங்குள்ள மக்கள் வழமைநிலை திரும்பி தமது சொந்த இடங்களுக்குச் செல்லும்வரை தம்மால் இவர்களுக்குசமைத்த உணவு வழங்க நடவடிக்கை எடுப்பதாக திருமலை மாவடட அரச அதிபர் காமினி றொட்றிகோ தெரிவித்தார். (04)

# ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராக பெர்னாண்டோ

## மானியங்கள் ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் பதில் துணைவேந்தராக பேராசிரியர் தயாசிறி பெர்னாண்டோ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்

ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக துணைவேந்தராகக் கடமையாற்றிய எபிடவத்தவை பதவி விலகுமாறு விரிவுரையாளர்களும் மாணவர்களும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருந்தனர்

இதனையடுத்து துணைவேந்தர் எபிடவத்தவை பதவியிலிருந்து நீக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார்

இதனையடுத்து துணைவேந்தர் பதவியிலிருந்து எபிடவத்தை நீக்கப்பட்டு புதிய பதில் துணைவேந்தராக தயாசிறி பெர்னாண்டோ நியமிக்கப்பட்டார்

இதேவேளை, தாம் தொடர்ந்தும் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றவுள்ளதாக எபிடாவத்தை தெரிவித்தார்

எபிடவத்தை பதவி விலக்கப்பட்டதை அடுத்து விரிவுரையாளர்களும் மாணவர்களும் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

# நீர் முகாதைத்துவம் தொடர்பாக அரசு எடுத்திருக்கும் நடவடிக்கையால் சிறு விவசாயிகளுக்குப் பாதிப்பில்லை

## அமைச்சர் ஜெயவிக்கிரம பெரேரா தெரிவிப்பு

நீர்முகாமைத்துவம் தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் போது சிறு விவசாயிகள் இந்த நீர் வரிக்கு உட்படுத்தப்பமாட்டார்கள்.

இவ்வாறு நீர்முகாமைத்துவம் மற்றும் விநியோக அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீர்வரி தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடந்த விவாதத்தின்போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நீர்முகாமைத்துவ சட்டத்தை அரசாங்கம் இன்னமும் இறுதிவடிவப் படுத்தவில்லை. அதன் அடிப்படையில் அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவருமா இல்லையா என்பது பற்றி உத்தேசிக்கவில்லை என்றும், நீர்முகாமைத்துவம் வந்தால் நீரை வெளியில் பணத்துக்குப் பெற்றுக் கொள்ளவேண்டிய நிலை ஏற்படும் என்ற கருத்துக்கள் அடிபடுகின்றன. இது தொடர்பாக மக்கள் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை எனவும் -

எல்லோரும் பணம் செலுத்தி நீரைப்பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படாது. அதேவேளை சிறு விவசாயிகள் இந்த வழியிலிருந்து விலக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளையில், நீர்முகாமைத்துவம் தொடர்பாக அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது என்றும்- எதிர்காலத்தில் மக்களிடத்தில் இந்தச் செயல் பாரிய வெறுப்பை உண்டாக்கும் என்றும் பணமில்லாத மக்கள் மத்தியில் நீர்த்தட்டுப்பாடு நிலவலாம் என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

# சமுர்த்தி நிவாரண கொடுப்பனவு; வடக்கு-கிழக்கு புறக்கணிப்பு!

## மனித உரிமை ஆணைக்குழுவில் புகார் தெரிவிப்பு

இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் வழங்கப்படும் மாதாந்த சமுர்த்தி நிவாரண முத்திரைக் கொடுப்பனவில் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு பாரபட்சம் காட்டப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக குழுவிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒரே நாட்டின் குறிப்பிட்ட ஒரு மாகாணத்துக்கு ஒரு நிவாரணமும், இன்னோர் மாகாணத்துக்கு வேறோர் அளவில நிவாரணமும் வழங்கப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர் மாவட்ட செயலகத்தில் சந்தித்தபோதே சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு மூன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொணட குடும்பத்துக்கு 1000 ரூபா பெறுமதியான முத்திரை வழங்கபபடுகின்றதெனினும், வடக்கு - கிழக்கிலுள்ள குடும்பங்களுக்கு 400 ரூபா முத்திரையே வழங்கப் படுகின்றது.

இந்தப் பாகுபாடு தொடர்பாக சமுர்த்தி அமைச்சிடம் பல தடவைகள் எடுத்துக்கூறியபோதும், இது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலர்கள் தெரிவித்தனர்.

### தேசிய கல்வியற் கல்லூரியில்

# சித்திர பாடநெறிக்கான நேர்முகப்பரீட்சை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

## கல்வியியற் கல்லூரி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசியக் கல்வியற்கல்லூரிகளில் சித்திரபாடநெறியைப் பயில்வதற்குரிய தகைமையான க.பொ.த. உயர்தரத்தில் சித்திரபாடத்தினை ஒரு பாடமாக கற்றும் - இசற்ஸ்கோர் முறையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு, மீண்டும் நேர்முகப்பரீட்சை நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைக் கல்வியியற்கல்லூரிகளின் ஆணையாளர் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சித்திரப்பாடநெறியைப் பயில்வதற்குரிய தகைமையிருந்தும், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாமையால், பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொலைபேசிமூலம் கல்விக்கல்லூரிகளின் ஆணையாளருடன் தொடர்பு கொண்டு உரையாடியபோது, அவர்களிடம் இதனை ஆணையாளர் தெரிவித்தாகக் கூறப்படுகின்றது.

மேலும், பாதிக்கப்பட்ட மாண்வர்கள் வர்த்தமானி அறிவித்தலுக்கு முரணானவகையில், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டதனால், தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் முறைப்பாடுசெய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

க.பொ.த. உயர்தரத்தில் சித்திர பாடநெறியைப் பயின்ற மாணவர்கள், முன்னுரிமை அடிப்படையில் கல்வியியற் கல்லூரிகளில் சித்திரபாடநெறியைப் பயில்வதற்கு உள்வாங்கப்பட்டு வருவது வழமையான விடயம் ஆனால், இந்த வருடம் க.பொ.த. சாதாரணதரத்தில் சித்திரபாடத்தினைப் பயின்ற மாணவர்களும் உள்வாங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (83)

# வாகன வசதி இல்லாததினால் கடமைகளைச் செய்யமுடியவில்லை

### பிரதேச செயலர் கவலை தெரிவிப்பு

வாகன வசதி செய்துகொடுக்கப்படாததால், மக்களுக்கான எனது கடமைகளைச் செவ்வனே செய்ய முடியாதுள்ளது என, நல்லூர் பிரதேசசெயலர் முருகையா கவலை தெரிவித்துள்ளார்.

அரியாலையில் நல்லூர் பிரதேச செயலகத்தின் உபகிளை ஒன்று, அப்பிரதேச மக்களின் நலன்கருதி திறக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அரியாலைப்பகுதி மக்கள் மிகப்பெரிய நன்மைகளை அடைந்துள்ளனர். இரவு-பகல் என்றுபாராமல் அர்ப்பணிப்புடன் கடமைகளைச் செய்கின்ற இந்த நேரத்தில், வாகன வசதி இல்லாததன் காரணமாக, புதிதாகத திறக்கப்பட்ட நல்லூர் பிரதேச செயலகத்தின் உபகிளையை, உரிய காலத்தில் திறந்து, கடமைகளைச் செவ்வனே செய்யமுடியாதுள்ளது.

இதன் காரணமாக இந்தக்கிளை அடிக்கடி பூட்டப்பட்டு, நல்லூர் பிரதேச செயலகத்தில் பணிகளைச் செயயவேண்டியுள்ளது. அத்துடன், நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசஙகளுக்கு, நேரடியாகச்சென்று மக்களின் குறைகளை அறியமுடியாதுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (55)



மக்கள் வங்கியால் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட 'சிசு உதான' சொல்வோம் வெல்வோம் வினாடிவினாப் போட்டியின் இறுதிப் போட்டியின் ஒருகாட்சியை படத்தில் காணலாம்.

# பெற்றோரை இழந்த பிள்ளைகளின் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

தாய் - தந்தையரை இழந்த 18 வயதிற்குட்பட்ட மாணவர்களின் பெயர விபரங்கள், யாழ். மாவட்ட செயலகத்தினால் திரட்டப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில், அந்தந்த பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களூடாக இந்தப் பிள்ளைகளின் விபரம் திரட்டப்பட்டு வருகின்றது. இவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடனேயே, இந்த நடவடிக்கை இடம்பெறுவதாகத் தெரியவருகிறது.

பிள்ளைகள் தங்களது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், பாடசாலையில் கல்வி பயில்வதற்கான உறுதிப்படுத்தும் அதிபரின் கடிதம், முத்திரை அளவிலான புகைப்படம் என்பவற்றை எடுத்துச்சென்று, தங்கள் கிராம சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்மூலம், பதிவினை மேற்கொள்ள முடியும் எனவும், இதற்கான மாதிரிப்படிவங்கள் உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் யாழ். மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது. (44)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



முதலாவது அகவையில்



பெயர் : ர.சாத்விகன்
முகவரி : தெணியகம், பொலிகண்டி.

இரண்டாவது அகவையில்

பெயர் : கே.மதுஷன்
முகவரி : பலாலி கிழக்கு, பலாலி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------

பெற்றோர் ஒப்பம்


# வீதி திருத்தப்பணிகளை மேற்கொள்ளவிடாது தடுத்து வர்த்தகர் ஒருவர் அடாவடித்தனம்

## திருநெல்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீதித் திருத்துப் பணிகளை மேற கொள்ள முயன்ற ஊழியர்கள் - தமது பணிகளைச் செய்யமுடியாத விதத்திலே வர்த்தகர் ஒருவர் தடைவிதித்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை பரமேஸ்வரா சந்திப்பகுதியிலே இடம்பெற்றது. சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக்கு முன்னாலுள்ள, பலாலி வீதிப் பகுதியில் வெள்ளம் தேங்கிநின்றதாகவும், அதனை வடிகால் வெட்டி அகற்றும் முயற்சியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையைச் சேர்ந்த ஊழியர்கள் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முயற்சிக்கு குறித்த கடை உரிமையாளர் ஒருவர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அத்தோடு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் வந்த வாகனத்தின் திறப்பைப் பறித்ததுடன், வாகனச் சாரதியையும் மிரட்டியுள்ளார்.

சம்பவத்தை அறிந்ததும், சம்பவ இடத்திற்கு வந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் ஸ்ரீனிவாசன் - சம்பந்தப்பட்ட வர்த்தகரோடு சமரசம் பேசச்சென்றதாகவும், அதனையும் பொருட்படுத்தாது குறித்த வர்த்தகர் தன்னிச்சையாக நடந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், உரிய பணியை மேற்கொள்ளமுடியாது ஊழியர்கள் திரும்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் தமது அதிருப்தியையும், விசனத்தையும் தெரிவித்துள்ளனர்.

அரசிற்கு சொந்தமான வீதிப் பகுதிகளில், எத்தகைய திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கும் தமக்கு உரிமையுண்டு எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### வீட்டுக்கூரை விழுந்து 6 பேர் காயம்

(சுதுமலை)

அடைமழை காரணமாகச் சாவற்கட்டு 100 வீட்டுத்திட்டத்திலுள்ள கந்தசாமி வவிச்சந்திரன் என்பவரது வீட்டுக்கூரை கீழே விழுந்ததில், 10 மாத குழந்தை உட்பட 6 பேர் காயமடைந்துள்ளனர்.

அடைமழையினால், கூரையில் போடப்பட்டிருந்த மரங்கள் முறிந்ததால், கூரை கீழே விழுந்துள்ளது. அந்தச் சமயம் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த க.வவிச்சந்திரன் (வயது 27) வ.ஜெயந்தினி (வயது 26), வ.வவித்து (வயது 7), வ.வவிதா (வயது 5), வ.வபிசா (வய்து 4), வ.வவிசன் (10 மாதம்) ஆகியோர் காயமடைந்துள்ளதுடன், வீட்டுத் தளபாடங்கள், சமையற் பாத்திரங்கள் என்பனவும் முற்றாக சேதமடைந்துள்ளன. (44)

### இலவசப் பாடசாலை உபகரணங்கள்

வடமராட்சி கிழக்கு - மாமுனை பகுதியிலுள்ள, 2004 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் தரம் I அனுமதி பெறும் மாணவர்களுக்கு, மாமுனை ஸ்ரீ நாக தம்பிரான் ஆலய நிர்வாக சபை - இலவச பாடசாலை உபகரணங்களை வழங்க முன்வந்துள்ளது.

இதன்படி, தைப்பொங்கல் தினத்தன்று இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. ஆகவே, அடுத்த வருடம் தரம் I அனுமதிபெறும் மாணவர்கள், இந்த ஆலய நிர்வாகத்திடம தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு ஆலயநிர்வாகம் கேட்டுள்ளது.(17)

### விசேட கலந்துரையாடல்

தற்போது பாடசாலைகளில் தரம 10,11 களுக்கு கடல் உயிரின வளத தொழில்நுட்பப் பாடத்தினை கற்பித்துக்கொண்டிருக்கும் சகல ஆசிரியர்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று, நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறவிருப்பதால், கடல்வள ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உடற் கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான அவசர கலந்துரையாடலொன்று இன்று காலை 10 மணிக்கு நீராவியடியிலுள்ள பிறைற்மன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதில் அடையாளப் போராட்டம் சம்மந்தமாகக் கலந்துரையாட இருப்பதால், உடற்கல்வி டிப்ளோமாதாரிகள், உடற்கல்வித்துறையில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள் அனைவரையும் காலை 10 மணியளவில் தவறாது ஒன்றுகூடு மாறுகேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.


### தண்ணீர்த் தாங்கியில் நீர் நிரப்பவில்லை

(பளை)

பளை பிரதேசசபைக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள தண்ணீரத் தாங்கியில், இரண்டு வாரமாக நீர் நிரப்பப்படாமையால், பாவனையாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். கடந்த 23 ஆம் திகதி இறுதியாக நிரப்பப்பட்டபின், இன்னும் நீர் நிரப்பப்படவில்லை. இதனால், வீதியால் செல்பவர்கள் நீரக்குழாயைத் திறந்து பார்த்துவிட்டு, ஏமாற்றத்துடன் செல்வதை அவதானிக்கமுடிகின்றது. (17)

# இலக்கியச்சோலை

## தெரு மீது விழி வைத்து



அன்றி சிந்துஜாவை உள்ளே கூட்டிக்கொண்டு 'இது தான் உன் அறை' என்று கூறி, ஓர் சிறிய அறையை அவளுக்குக் காண்பித்தாள். ஒரு சிறிய மேசையும், ஒரு படுக்கையும் மட்டுமே இவ்வறையில் காணப்பட்டன. சுவர்களில், பல கவர்ச்சிகரமான தோற்றங்களில் பெண்களின் உருவப்படங்கள் காணப்பட்டதையும் சிந்துஜா அவதானித்தாள். உள்ளே வந்த கதவைத்தவிர வேறுகதவுகளோ, ஜன்னல்களோ எதுவும் காணப்படவில்லை. படார்! என்ற சத்தத்துடன் கதவு அடைபட்டது. சிந்துஜா திரும்பிப் பார்த்தாள். அன்றியைக் காணவில்லை.

கதவு பூட்டப்பட்டிருந்தது. ஓடிச் சென்று அதன் கைபிடியை திருகிப் பார்த்தாள். ஆனால் கதவு திறபடவில்லை. 'அன்ரி... அன்ரி... கதவை திறந்துவிடுங்கள். பயமாக இருக்குது' என்று கதறியடி கதவை அடித்தாள். பயத்தினாலும், தனிமையினாலும் அழுதாள். அவள் மென்மையான சிறுகைகளினால் கதவைப் பலமாகத் தாக்கினாள். கைகள் சிவந்து காயங்கள் ஏற்பட்டன. அன்ரியை அழைத்தபடி கதவை அடித்துக் கொண்டே இருந்தாள். அவள் எண்ணங்கள் எதையும் புரியமுடியவில்லை. என்ன நடந்தது? என்ன நடக்கின்றது? எதையும் அவளால் சிந்திக்கமுடியவில்லை. அவள் உணர்ந்தது அச்சமும், தனிமையும் மட்டுமே. கதறி அழுதாள், புலம்பினாள், கதவை அடித்தாள், உதைத்தாள். ஆனால், கதவோ மூடியபடியே இருந்தது. பொழுது சாய்ந்துகொண்டிருந்தது. காலையில் அவள் உணவு உண்ணவோ, நீர் அருந்தவோ இல்லை. எனினும் பசி, தாகம் எதுவும் அவளாள் புரியமுடியவில்லை. மணித்தியாலங்கள் கடக்க அவள் நெஞ்சில் வளர்ந்த சூனிய உணர்வு படிப்படியாக அவள் உடலையும் ஆட்கொள்ள ஆரம்பித்து. அவள் கை, கால் விறைப்படைந்தது. குரலும் அடைத்தது, உடல் செயலிழந்து நிலத்தில் விழுந்து அழ முடியாதவளாக அழுதுகொண்டிருந்தாள்.

நேரம் அண்ணளவாக 10 மணியிருக்கும். சிந்துஜா திடுக்கிட்டு கண் விழிக்கிறாள். இதேநேரத்தில் கதவைத் திறந்து ஒருவன் உள்ளே வந்தான். அன்ரியும் உள்ளே வந்தாள். அவளைக் கண்டதும் சிறுமிக்கு மீண்டும் நம்பிக்கை பிறந்தது. அன்ரியை அணைப்பதற்காக அவளிடம் ஓடிப்போனாள். அன்ரியோ 'போடி அங்காலை' என்று வஞ்சகத்துடன் சிந்துஜாவைத் தள்ளிவிட்டு, அங்கு வந்தவனிடம் ஏதோ பேசினாள். அவன் தலையாட்டி தன் பொக்கற்றிலிருந்து பணத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான். அன்ரி திரும்பி வெளியே செல்ல, சிந்துஜா அன்ரியிடம் ஓடமுயன்றாள். ஆனால், அங்கு வந்தவனோ சிந்துஜாவை அவள் சட்டையில் பிடித்துக்கொண்டான். அன்ரி வெளியே சென்று கதவைப்பூட்டினாள்.

அன்றிரவு அவ்வறையில் இச்சிறுமிக்கு நடந்த கொடுமை வார்த்தைகளால் கூறமுடியாது. அன்று நடந்த எதுவும் சிந்துஜாவிற்குப் புரியவில்லை. அவளை இவ்வாறு வதைப்பது மனிதனா? மிருகமா? என அவளால் விளங்கமுடியவில்லை. உடல், உள வேதனை அவளை முற்றிலும் ஆட்கொண்டது. அங்குவந்தவன் இரக்கமின்றி அவள் உடல்மீது அவனது அரக்கத்தனமான காமத்தீயைக் கொட்டித்தீர்த்தான். அவளது வேதனையும், கண்ணீரும் அவன் கொடூரத்தை எரியும் தீயில் எண்ணை ஊற்றுவதைப்போல் அதிகரிக்கச்செய்தன. அவளை முழுமையாக ருசிபார்த்த அவன், இறுதியில் அவன் நஞ்சைத்தீர்த்தான். சிந்துஜா மீது எவ்வித மனிதாபிமான உணர்வுமற்றவனாக எழுந்து கதவைத் தட்டினான். கதவு திறந்தது. அவன் வெளியே சென்றான். கதவு மூடியது. அறையில் மீண்டும் அமைதி நிலவியது.

சிந்துஜா நிலத்தில் கிடந்தாள். அவள் கண்கள் திறந்து காணப்பட்டன. ஆனால் அவற்றில் உணர்வேதும் காணப்படவில்லை. அறையெங்கும் சிதறிக்கிடந்த அவள் உடைகளில் அவள் கற்பின் குருதியும் சிதறியிருந்தது. கற்பைப் புனிதப் படுத்தும் நாட்டின் வாழ்ந்த இவள் அக்கற்பை இம்மிருகத்திடம் பலி கொடுத்தவளாகக் கிடந்தாள். சிந்துஜா தனிமையில் இருந்தாள். ஆனால் இப்போது அவள் மனம் தனிமையை விரும்பியது. இரவின் இருள் அவளது ஆடையாக இருக்க, தனிமையின் ஆதரவு தாயின் அரவணைப்பாக இருந்தது.

அவள் வாழ்வின் அடுத்த சில மாதங்கள் இந் நரகத்திலேயே கழிக்கப்பட்டன. ஒவ்வொருநாளும் ஒருவர், இருவராக மனித மிருகங்கள் அவள் மேனியை ருசி பார்த்தன. அவள் அன்று அன்புடன் அழைத்த அன்ரி என்ற அரக்கியின் சிறையில் கட்டுண்டு தப்பிக்க முடியாதவளாக வாழ்ந்துவந்தாள்.

ஒரு நாள் வழமைபோல் ஒருவன் அவள் உடலில் சுகங் கண்டு வெளியே சென்றவேளை, கதவு பூட்டப்படாது விடப்பட்டதை அவதானித்தாள். இன்னுமொருவன் உள்ளே வரப்போகின்றான் என அறிந்த அவள், தன் மனதைத் திடப்படுத்தினாள். ஆனால் ஒருவரும் வரவில்லை. எழுந்து கதவிற்கு வெளியே எட்டிப்பார்த்தாள். அன்ரியிற்கும், இப்போது அவளிடம் வந்து போனவனிற்கும் இடையே வாக்குவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவள் நின்ற இடத்திலிருந்து பார்க்க முன் கேட் வாசலும், தெருவும் தெரிந்தன. தப்பிக்க இவ்வழி அவளுக்குத் தெரிந்தது. எதைப்பற்றியும் அவள் எண்ணவில்லை. சுதந்திரக் காற்றைப் பல மாதங்களுக்குப் பின் அவள் சுவாசிக்க, அசாதாரண பலத்துடன் வேகமாகத் தெருவை நோக்கி ஓடினாள். அன்ரி அவளைக் கண்டு உரத்ததொனியுடன் அவளை அழைத்து பின்தொடர்ந்தாள். ஆனால், சிறுமியின் வேகத்துக்கு அவளால் ஈடுகொடுக்க முடியவில்லை. அவள் வீட்டு வாசலை அடையும் முன், சிறுமி தெருவிலிறங்கி, நகரின் மத்திய பகுதியை நோக்கி ஓடினாள். அக்கொடிய அரக்கியிடமிருந்து எவ்வளவு தூரம் ஓடமுடியுமோ, அவ்வளவு தூரம் ஓடவேண்டும் எனும் ஒரேநோக்குடன் சிறுமி காற்றைப்போல் ஓடினாள். கதிரவன் ஒளியும், இயற்கைத் தென்றலும், திறந்த வெளியும் அவளை அளவில்லா இன்பத்தில் ஆழ்த்தியது. தன் தாயையும், தம்பியையும் காணமுடியும் எனும் நம்பிக்கை அவள் மனதில் வளர்ந்தது. பஸ்தரிப்பிடத்தை வந்தடைந்தாள். தன் கிராமத்துக்குச் செல்லும் பஸ்வண்டியையும் கண்டுகொண்டாள். அவள் கிராமத்தின் பெயரை அவ்வண்டியில் கண்டதும், அவளுக்கு ஏற்பட்ட ஆனந்தமிகையால், கண்ணீர் வடித்தாள். அன்று தனது தாயின் உண்டியலிலிருந்து எடுத்த பணத்தின் ஒரு பகுதி இத்தனை காலமும் கவனமாக அவளுடன் இருந்தது. அப்பணத்தைக் கொடுத்து, ரிக்கற் எடுத்து வண்டியில் ஏறியமர்ந்தாள்.

தன் கிராமத்தின் இயற்கை அழகை இரசித்த வண்ணம், சிந்துஜா தனது வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். 'இத்துணை அழகான ஒரு இடத்தில் நான் வாழ்ந்தேனே' என எண்ணி வியந்தாள். அவள் வீட்டை அண்மித்தாள். அவள் இதயதுடிப்பு அதிகரித்தது. தன் தாயின் அரவணைப்பிற்கான ஏக்கம் அவளைக் கொள்ளைகொள்ள, வீட்டைநோக்கி ஓட ஆரம்பித்தாள். அக்கா... அக்கா... என்று அழைத்த ஒரு சிறுவனின் குரல் அவளைப் பின்தொடர்ந்து கேட்டது. அவள் நின்று திரும்பிப்பார்த்தாள். ஓர் கிழிந்த காற்சட்டையை மட்டும் அணிந்தவனாக ஒரு சிறுவன் அவளைப் பின்தொடர்ந்து வந்தான். அவனது அழுக்கான தோற்றத்தாலும் வாடிய உருவத்தாலும் அவன் அண்மிக்கும்வரை இச்சிறுவன் அவள் தம்பி என அவள் மதிக்கவில்லை. சிறுவன் யார் என அவள் கண்டுகொண்டதும், ஆனந்தத்துடன் அவனிடம் ஓடி, அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு இறுக்க அணைத்துக்கொண்டாள். அவர்களது உணர்வுகள் சற்று அடங்கியபின், அவள் அவனிடம் நீ 'இங்கு என்ன செய்கிறாய். அம்மா உனக்காக வீட்டில் தேடிக்கொண்டிருப்பாள்' என்று சிந்துஜா கூற, சிந்துஜா சென்று சில நாட்களுக்குப் பின், புவனேஸ்வரி அவர்கள் வீட்டிற்கு வந்து, அவள் தாயைத் தாக்கியதில், அவள் இறந்துவிட்டாள் என்றும், நீதி கேட்க எவருமில்லாததால், புவனேஸ்வரி அவர்கள் வீட்டையும் தனதாக்கி, தன்னை வெளியே துரத்தி விட்டாள் என்பதையும் சிறு வன் கூறினான்.

அன்றிலிருந்து, தான் தெருவில் பிச்சையெடுத்துக் கொண்டு வாழ்ந்து வருவதாகவும் அவன் கூறினான். இவற்றைக்கேட்டு சிந்துஜா அழுதாள். அவள் ஆனந்தம், நம்பிக்கையனைத்தும் பொய்யாகிவிட்டதை உணர்ந்தாள். ஆனால், இத்தனைகாலம் அவள் காணாத சுகம், அன்றுதான் தம்பியின் ஆறுதல் கரங்களில் கண்டாள். அதற்காக கடவுளிடம் நன்றி கூறினாள். 'அவள் தம்பியிடம் வா நாம் பஸ்தரிப்பிடத்தை எமது இல்லமாக அமைப்போம்' எங்கள் அப்பா ஒருநாள் அவ்விடத்துக்கு வருவார். அதுவரை விழிவைத்துக் காத்திருப்போம் என்றுகூறி இருவரும் பஸ்தரிப்பிடத்துக்குச் சென்றனர்.

☆

### அழுகையும் எழுகையும்




துன்பத்தீயினிலெம் காலங்களெரிந்தது.
தப்பவழி தெரியாமற் தவித்திருந்த வேளைகளில்...
துப்பாக்கி யெங்களைத்
துரத்திக்கொண்டிருந் தது.
ஊருறவை, உரிமைகளை...
ஊழிப்பெருக்கள்ளிச் சென்றபோதும்
ஊமைகளாக்த் தானிருந்தோம்.
நிலம்வெடித்த போதுகூட நீளமைதி
நாம் கொண்டோம்.
போரரக்கப் பிடியினிலே...
நிதமிருந்து இயலாமல்,
நெருப்போடு நிமிர்ந்தெழுந்தோம்
நீளுமெம் பயணங்கள்...
நாடுபெற்றே நிறைவேறும்।

சு.க.சிந்துதாசன்
பொலிகையூர்

# நூல் அகம்

## நிறங்கள்




'நிறங்கள்' என்னும் பெயரிலான சிறுகதைத் தொகுதி ஒன்று வெளிவந்துள்ளது. சுப்பையா பரமேஸ்வரன் என்ற இயற்பெயர் கொண்ட இணுவையூர் உத்திரன் என்பவரால், இந்த சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. இணுவில் பொதுநூலக இலக்கிய மன்றம் இந்நூலினை வெளியிட்டுள்ளது.

முப்பது சிறுகதைகளை உள்ளடக்கிய இந்த 'நிறங்கள்' என்னும் சிறுகதைத் தொகுதி, முதலாவது பாகமாக வெளிவந்துள்ளது. இதன் இன்னொரு பாகமும் வெளிவரும் என்ற நம்பிக்கையை இது தந்துள்ளது.

'ஒரு நல்ல சிறுகதை எப்படி இருக்கவேண்டும்? ஒரு கதையைப் படித்துக்கொண்டிருக்கின்றோம் என்ற உணர்வை அது வாசகரிடம் எழுப்பாமல் இருக்கவேண்டும். வாழ்க்கையைப் பார்க்கின்றோம் என்று தோன்றச் செய்யவேண்டும். ஏனென்றால், இலக்கியத்தை ஒருபோதும் வாழ்வில் இருந்து பிரித்துவிட முடியாது. உயிரோட்டமுள்ள வாழ்க்கைத் தரிசனமாக - உத்திரனின் சிறுகதைகளில் அமைதியைப் பார்க்கின்றேன். மனித உணர்வின் ஆழ்ந்த மீட்டல்களாகச் சிறுகதைகள் அமைகின்றன. இவ்வாறு உத்திரன் சிறுகதைகள் பற்றி திருமதி கோகிலா மகேந்திரன் தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'நிறங்கள்' என்றும் சிறுகதைத் தொகுதியிலுள்ள சிறுகதைகள், பலவிதமான கருப்பொருள்களில் அமைந்துள்ளது. பலவிதமான உணர்வுகளின் வெளிப்பாடாய், பல்வேறு முகங்களை, அவற்றின் குணங்களைப் பல்கோணங்களில் படம் பிடித்துக் காட்டுவதாக உத்திரன் தனது என்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

'நிறங்கள்' சிறுகதைத் தொகுதியிலுள்ள 30 கதைகளினை - அரசியல், காதல், பெண், ஏனையவை என்ற நான்கு பிரிவுகளில் நோக்கமுடிகிறது. காதல் தொடர்பான கதைகளில் பல்வேறு வகையான காதல் குறிப்பிடப்படுகின்றது.

காதலுக்காக எதனையும் செய்யும் ஒரு காதலியின் நிலை. காதலிக்கும் நபர், எதனை விரும்புகின்றானோ அதனையே காதலி விரும்புகின்ற மனோநிலை. நண்பன் தன் தங்கையைக் காதலிக்கின்றான் என்று அறிந்ததும், ஒருவன் அடைகின்ற மனவுணர்வு- ஒரு பெண்ணை எல்லோரும் காதலிப்பது என்பது ஒரு குறித்த பருவத்தில்தான் என்ற நடைமுறை. காதலில் தோல்வியுற்ற ஒருவன், காதலிக்கும்போது காதலிக்காக கற்றுக்கொண்ட கல்விகள் எத்தகைய பயன்பாட்டை அடைகின்றன என்ற ஒரு புதிய சிந்தனை. காதலில் தோல்வி அடைந்த காதலர் - தம் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துவைக்க நினைக்கும் எதிர்பார்ப்பு. காதலில் தோல்வியடைந்தாலும், அதனை எவ்வாறு வெற்றியாக்கிக் கொள்ளலாம் என்ற அறிவுரை.

காதலோடு இணைந்தவகையில், அரசியல் விடயங்களைக் கூறும் இரண்டு கதைகள். யாரும் எதிர்ப்பு இல்லாத காதலும், அரசியல் காரணத்தால் நிறைவேறாமல்போகும் அவலம் இந்தக் கதைகளில் குறிப்பிடப்படுகின்றன.

இவ்வாறு காதல் தொடர்பான ஒன்பது கதைகளின் 'நிறங்கள்' என்ற இத்தொகுதியில் அமைந்துள்ளன.

உத்திரனின் 'நிறங்கள்' கதைத் தொகுதி முழுமையாக அரசியல் விடயங்கள் பரவிக்காணப்பட்டபோதிலும், மூன்று கதைகள் அரசியலால் தோன்றிய அவலநிலையை விளக்குகின்றன. அப்பாவிப் பொதுமகனின் வீடு - பயங்கரவாதிகளின் இருப்பிடமாகத் தெரியும் இராணுவ அட்டூழியம். தன்சொந்த இடத்தில் உயிர்பிரிய நினைக்கின்ற ஊர்பற்று. இதற்குமாறாகச் சொந்த இடத்திற்கு வரமறுத்து, கடிதம் மூலம் கொள்ளிவைக்கும் வியப்புக்குரியவர. இது அரசியலை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட கதைகளைக் காணலாம்.

பெண்தொடர்பான நான்கு கதை இத்தொகுதியில் அமைந்துள்ளன. திருமணம் பொருந்திவராமல், காத்துக் கொண்டிருக்கும் 'இராமரைத் தேடும் சீதைகள்'. தன்னுடைய ஒருநாள் பொழுதை எவ்வாறு ஒருபெண் கழிக்கிறாள் என்பதும், தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் கடமையுணர்வும், வேலைக்குச் செல்லும் ஒரு பெண்ணின் கணவன் - அவளிடம் எவ்வாறு நடந்துகொள்கின்றான் என்கின்ற 'மாதர் தம்மை' என்ற கதையும், அதற்கு எதிர்மாறான 'சுந்தரி நீயும்' என்கின்ற கீழைத்தேச நாடுகளின் பண்பாட்டை சிறப்பிக்கும் கதையும் - பெண் தொடர்பாக அமைந்த கதைகளாக காணப்படுகின்றன.

காதல், பெண், அரசியல் ஆகிய மூன்று விடயங்களையும் தவிர்த்து, ஏனைய விடயங்களைப் பேசுவதும் இவற்றையே கலந்து, பொதுவாகக் கூறுவதுமான கதைகள் ஏனையவை என்ற பிரிவில் இங்கே நோக்கப்படுகின்றன. இவ்வாறு ஏனைய 14 கதைகளையும் கூறமுடிகின்றது.


'ஏப்ரல் ஒன்று' என்ற சிறுகதையில் காதலும், அரசியலும் கலந்திருப்பதைக் காணலாம். 'ஆடிக்கூழ' என்ற சிறுகதை ஆடிபபிறப்பில் கூழ்குடிக்க விரும்பும் கொழும்பு அறைவாழ் நண்பர்களின் ஆசையை வெளிக்காட்டுகின்றது. 'தொழிலாளர்தினம்' தொழிலாளர்களின் உரிமையை வெளிப்படுத்துகின்றது. வாக்குமூலம், மேற்கே தோன்றும் உதயம், கனடா மாப்பிள்ளை ஆகியன - கீழைத்தேச நாகரிகம் எவ்வகையில் சிறந்தது என்ற கருத்தினை தருகின்றன.

நிறங்கள் - மணிக்கூட்டு வாழ்க்கை, விரல்கள் என்பவை பல்வேறு மனிதர்களின் குணவியல்புகளை விளக்குகின்றன. 'இது ஒரு அழகிய நிலாக்காலம்' என்ற சிறுகதை - கற்பனையில் காணவிழையும் உத்திரனின் கம்பியூட்டர் உலகை சித்திரிக்கின்றது. எழுத்தாளன் என்ற சிறுகதையில் - உத்திரன் என்ற எழுத்தாளன் எத்தகைய உணர்வுகளுடன் இந்த நிறங்கள் என்ற சிறுகதைத் தொகுதியை படைத்திருப்பான் என்ற உணர்வுகளைத் தரிசிக்கமுடிகிறது.

உத்திரனின் ' நிறங்கள்' என்ற சிறுகதைத் தொகுதி- ஈழத்து சிறுகதை உலகத்துக்குப் புதிய வரவாக இடம்பெற்றுள்ளது. இலக்கியத்துறையின் ஒரு எதிர்கால நம்பிக்கையாளராக உத்திரனை இனங்காட்டியுள்ளது.

**பூ.நகுலன்.**

# அது போதும்!




அடிக்கடி ஒலிக்கும் ஆலய மணி
பாடிப் பறக்கும் பறவைகள்
தொடர் ஒலி எழுப்பும் வண்டுகள்
எனது ஊர்.
எப்பொழுதும் அழகாய்தான் இருக்கும்
காற்றில் அசையும் மரங்கள் கூட
கீதம் பாடும்.
சேற்றில் உழும் ஏர் கூட
இசை எழுப்பும்.
வீணை தாங்கிய கலைமகள் வீற்றிருப்பது
எங்கள் ஊராய்த்தான் இருக்கும்.
ஊரில் வாழ்ந்த காலத்தில்
உணவின்றி ஒருவேளை அறியோம்.
நோயென்று அடிக்கடி
பாயில் விழுந்தது கிடையாது.
நீருக்காக அலைந்ததில்லை
ஓலைக்குடிசைகளிலும் ஒழுக்கிருக்காது
வேளை தவறாது வேயப்பட்டிருக்கும்.
கூழ்தான் உணவெனினும்
குடிக்கும்போது சந்தோஷம் இருக்கும்
வியர்வை நிலத்தில் சிந்தும் பொழுது
உழைப்பின் மேன்மை விளங்கும்.
களைப்புக்கள் ஒருபோதும்
சளைப்புக்களைத் தருவதில்லை, தந்ததில்லை.
இப்பொழுதெல்லாம்
சந்ததியாக நாம் வாழ்ந்த இடம்
சனம் வாழ்ந்ததற்கான அடையாளம் கிடையா.

**மா.வி. சசிகரன்** (தொடரும்)

# கவிதைச் சோலை

## தோல்வியில் கூட




ஒவ்வொரு முறையும்
என்னை நீ
சோதித்துக் கொண்டிருக்கிறாய்.
உனக்கு
நன்றாகவே தெரியும்
தோற்றுப் போகிறவன்
நானில்லையென்று.
தோல்வியினால் கூட
போராடியே
தோற்பவனென்பதும்
நீ அறிந்ததே.
அந்தத் தோல்வியிலேகூட
வெற்றியொன்றை
நிலை நாட்டிவிட்டுச்
செல்பவனென்பதும்
நேரடியாக நீ
அவதானித்த செய்தி.
இழப்பு மட்டுமே
உனக்குத் தெரிகிறது.
அதன் பின்னாலுள்ள
எனது வெற்றிகளை நீ
அறிந்து கொள்வதேயில்லை.
ஒன்றை நீ
புரிந்துகொண்டுவிடு
நன்மையான காரியங்கள்
இங்கு
பந்தயங்கள் மூலம்
நிறைவேறிக்கொண்டிருக்கிறது.
நாளை...
வேறு பந்தயங்களும்
வரலாம்...
அதுகூட
நன்மையாகவே
முடிவடையலாம்.
காத்திரு
உனது இழப்புகளுக்காக.

**அ.சூரியன்**

# கிழக்கும் மேற்கும்

## புலவர் தருமி - கவிஞர் பிர்தௌசி



தனது நகரினைச்சுற்றிப் பாய்ந்திடும்
ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து
நாட்டு மக்கள் நலம்பெறும் வகையில்
செய்திடல் வேண்டும் எனப்பல நாட்களாய்
எண்ணி இருந்தவர், கவிஞர் பிர்தௌசி!
மன்னன் வழங்கிய வாக்குறு தியினால்
மனம்மிக மகிழ்ந்த கவிஞர் பெருமான்
கிடைத்த வாய்ப்பினை மனமுவந்து ஏற்றார்!
முப்பத்து மூன்று வருடமாய் உழைத்து
தாம்மேற் கொண்ட பெரும்பணி யதனை
வெற்றிகரமாய் நிறைவு செய்தனர் -
அருங்கலை வாணர் கவிஞர் பிர்தௌசி!
மன்னன் விரும்பிய வண்ணம் அந்தக்
கவிஞர் பாடிய காப்பியத்தினிலே
ஈரடிச் செய்யுள் அறுபதினாயிரம்
இருந்தன என்ற இந்த உண்மையை
அரசன் அறியா வண்ணம் மறைத்த
அமைச்சனாகிய அந்த வஞ்சகன்
கவிஞருக்கு மன்னவன் கொடுத்த
வாக்குறுதி யினையும் பூர்த்தி செய்யாமல்
அறுபதினாயிரம் பொற் காசுகளை
அளிப்பதற்குப் பதிலாய் வெறுமனே
அறுபதினாயிரம் வெள்ளி நாணயங்களை -
அளவிலும் சிறுத்த வெள்ளிப் பணங்களை -
பிர்தௌசியிடம் தந்து; மன்னன் முன்
தந்த வாக்குறுதியின் தகுதியும் பெறுமதியும்
அற்றுப் போக அநீதி பெருகிடத்
தந்திரமாகச் சமாளிக்க முயன்றான்!
மன்னனின் வாக்கு மீறப்பட்டதை
உணர்ந்த கவிஞர் பெருஞ்சினம் கொண்டனர்!
தமக்குக் கிடைத்த வெள்ளிப் பணங்களைத்
தந்தவர் களுக்கே திருப்பிக் கொடுத்தனர்!
அரசன் மீதொரு நிந்தனைப் பாடலை
இயற்றிக் கொடுத்தனர்!! நாட்டைப் பிரித்தனர்!!
கசப்பும் சினமும் காழ்ப்பும் உந்திடப்
புறப்பட்ட கவிஞர் பிர்தௌசி, முதலில்
'மெசிண்டரன' நகரினை அடைந்தனர்; பின்னர்
'பாக்தாத்' என்றனர், பாவம் கவிஞர்!
இறங்கும் தறுவாய் நெருங்கு துணர்ந்தவர்

**முருகு**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

-திருக்குறள்.

## நமது நோக்கு

# இந்திய அணுகுமுறை மாறவேண்டும்

சிறிலங்காவின் இனப்பிரச்சினை விவகாரத்தில், இந்தியாவின் கவனமானது மீண்டும் குவிமையம் கொள்ளத்தொடங்கியுள்ளதை அதன் அண்மைக்கால செயற்பாடுகள் உணர்த்துவதாக உள்ளன.

ஒருகாலத்தில் - அதாவது 1980களில் இனப்பிரச்சினை ஆயுதப்போராட்டமாக தீவிரம் கொள்ளத் தொடங்கிய கால கட்டத்தில், இந்தியா இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்க நிலையை வலுப்படுத்தும் தொலைநோக்குத் திட்டத்துடன், பூகோள அரசியல் அனுகூலங்கள் மற்றும் தனது பாதுகாப்பு உட்பட இராணுவ நலன்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இலங்கையுடனான - குறிப்பாக இங்கு வாழும் தமிழ்மக்களுடனான வரலாற்று ரீதியானதும், பாரம்பரிய கலாசார பண்பாட்டுத் தளங்களை இறுக்கமாகக் கொண்டுமான உறவுகளின் உரிமையின் அடிப்படையில், இலங்கை இனப்பிரச்சினையில் தலையீடு செய்தபோது அது குறித்து இந்தியாவைத் தட்டிக்கேட்க எவரும் முன்வரவில்லை.

அது அப்போது இந்தியாவுக்கு கிடைத்த ஒரு வெற்றியாகவே கணிப்பிடப்பட்டது. ஆனால், அந்த இந்தியத் தலையீடானது - இந்திராகாந்தி உயிரோடு இருக்கும் வரை இருந்த நிலையில் இருந்து ராஜீவ்காந்தி பிரதமரானதும் மாறத் தொடங்கியது. தவறான மதிப்பீடு, பிழையான ஆலோசனை, தொலைநோக்கு சிந்தனையற்ற அணுகுமுறை ஆகியவற்றின் காரணமாகவும், ராஜீவின் அரசியல் முதிர்ச்சியின்மை காரணமாகவும், மாறுபட்டதோர் நிலைக்கு மாறியது.

1987 இல் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இந்திய உடன்பாடு, அல்லது ராஜீவ் - ஜே.ஆர்.ஒப்பந்தமானது, இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை எட்டுவதற்கான தமிழ் மக்களுக்கு உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்கான இலக்கினைக் கொண்டதென பெருமெடுப்பில் பிரசாரம் செய்யப்பட்டபோதும், தமிழர் தரப்பை புறந்தள்ளிவிட்டு, இந்திய நலன்களை கருத்தில் கொண்டு, சிறிலங்காவை நெருக்கடியில் இருந்து விடுவிக்க மேற்கொண்ட ஒரு இணக்கப்பாட்டு உடன்பாடு மட்டும் தான் என்பது அது கைச்சாத்தான சில வாரங்களிலேயே தெரிந்தது.

ராஜீவ் விரித்த வலையில் ஜே.ஆர்.விழுந்தார் என ஆய்வாளர்களால் அந்த ஒப்பந்தம் குறித்து அப்போது வர்ணிக்கப்பட்டபோதும், காலப்போக்கில் ஜே.ஆரின் ராஜதந்திர வியூகப் பொறிக்குள் ராஜீவ் விழுந்தார் என்பதை உலகம் உணர அதிக காலம் எடுக்கவில்லை.

அது இந்திய ராஜதந்திரத்துக்கு கிடைத்த மோசமான, சர்வதேசரீதியிலான தோல்வியாகும்.ராஜீவின் அரசியல் ஞானக் குறைவுக்கு சான்றாகவும் அமைந்தது. இலங்கை-இந்திய உறவில் மட்டுமல்ல,இந்திய-தமிழீழமக்களின் உறவிலும் விரிசலை ஏற்படுத்தியது.

இது நடைபெற்று கிட்டத்தட்ட ஒன்றரை தசாப்தங்களுக்கும் மேலாகிவிட்ட நிலையில், இவ்விவகாரமானது பல்வேறு பரிமாணங்களைக்கடந்து இன்று சர்வதேச நாடுகள் பலவும் அதற்குள் நுழைந்து சமாதானம் என்ற போர்வையின் கீழ் தத்தமது அரசியல், இராணுவ ஆதாயங்களை தேடுமளவிற்கு அதிலிருந்து இந்தியாவை ஒதுங்கி நிற்கச் செய்தமையானது இந்தியாவுக்கு கிடைத்த ஒரு பின்னடைவாகவே இந்தியாவை உணரவைத்து விட்டது.

நேரடியாக தலையீடு செய்யவும் வெட்கம், தயக்கம். தலையிடாமல் தவிர்த்தால் பிராந்திய அரசியல் மேலாதிக்க நிலைக்கு ஏற்படக்கூடிய ஆபத்து குறித்த அச்சம் இந்தியாவை, இந்தச் சமாதான நடவடிக்கைகள் ஆரம்பித்த காலம் முதல் இருந்தே வந்தது.

விடுதலைப் புலிகளுடனான அரசின் - சர்வதேச அனுசரணையுடனான பேச்சுவார்த்தைக்கு ஆதரவோ, அங்கீகாரமோ அளித்தால் கௌரவக் குறைவென இந்திய அரசு நினைத்ததால், இன்று இந்தியாவின் இடத்தை மேற்குலகம் எடுத்துக் கொண்டது.

இங்கும் இந்தியாவின் கணிப்பு பொய்த்துப் போய்விட்டது. காலம் கடந்தே நிலைமையின் சிக்கலை இந்தியா உணர்ந்துள்ளதாகத் தெரிகிறது. எனினும், பழைய மதிப்பீட்டின் அடிப்படையில், கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தாது இன்னமும் தனது செயற்பாடுகளை தொடரப் போகின்றதா என்பதே தற்போதைய கேள்வி.


அண்மையில் இந்திய முன்னாள் இராஜதந்திரிகளில் ஒருவரும், புதுடில்லியை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் வியூகங்களுக்கும், சர்வதேச ஆய்வுகளுக்குமான மையத்தின் தலைவரான ராஜ்கோத்ரா என்பவர் - கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் 'இலங்கையில் வாழும் தமிழ்மக்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காக உரிய தரப்பினர் ஜனநாயகக் கட்டமைப்புக்குள் மேற்கொண்டு வருகின்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருப்பதாகவும், இலங்கையின் இறைமையைப் பாதுகாக்க வேண்டுமென்பதிலும் அது தெளிவாக இருப்பதாகவும' வழமையான பாணியிலான இந்திய உரையொன்றை ஆற்றியுள்ளார்.

இலங்கையின் இறைமையும், ஒருமைப்பாடும் பாதுகாக்கப்படவேண்டுமென்றால் தமிழ்மக்களின் அரசியல் மற்றும் சுயநிர்ணய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற சாதாரண அரசியல் கோட்பாட்டையும் இந்தியா புரிந்துகொள்ள வேண்டியதும் அவசியம்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் லண்டனில் மாவீரர் நாளில் ஆற்றிய உரையில் 'இந்தியாவைப் பகைத்துக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை. இந்தியாவை தொடர்ந்தும் நட்பு சக்தியாகவும், நேசசக்தியாகவுமே நாம் கருதி வருகின்றோம். இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா பங்களிப்புச் செய்யவிரும்பினால், தனது புலிகள் தொடர்பான கொள்கையை மாற்றுவது குறித்து அது சிந்திக்க வேண்டும் - வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் செய்ய வேண்டும்' என்று தெரிவித்திருப்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

இக்கருத்தை அதன் அரசியல் யதார்த்தம் மற்றும் பொருத்தப்பாடு காரணமாக வீம்புத்தனமான கௌரவத்திற்கு அப்பால், இந்தியத் தரப்பினர் கவனத்தில் கொள்வதுதான் நியாயமானதும், இரு தரப்பினருக்கும் நன்மையளிப்பதுமாகும்.

## நாடும் நடப்பும்




# அதிகாரமுள்ள, அங்கீகாரமுள்ள அரசுடனேயே....

இதுபுறம்பாக இந்தக் குழுக்கள் கூடிக்கதைத்து, அதொரு பக்கம் கூட்டங்கள் நடைபெற்றுவருகிறது. கருணா வந்து சொன்னார், பாலாண்ணை சிங்களத்தரப்பு - இராணுவதரப்பில் ஜெனரல் சரத் பொன்சேகா அவர் ஒரு சரியான கடும்போக்கானவர். அவர் விட்டுக்கொடுக்கிறது மாதிரி இல்லை. இதில் பேசிப் பிரயோசனம் இல்லை. நாங்கள் அவரோடு கூடிக் கதைச்சிட்டம். ஆனால் சிங்களத் தரப்பில், இராணுவ தரப்பில் அவர் ஒன்றும் விட்டுத்தருகிற மாதிரி இல்லை. தமிழ்ச் செல்வனும் வந்து சொல்லிச்சுது - அண்ணை நாங்கள் சும்மா கூடிக்கூடிக் கதைக்கிறோம் ஒழிய, இவைகள் பிரச்சனையை இழுத்தடிச்சுப் போகினமேதவிர - கொமிற்றிகளால் ஒரு பிரயோசனம் இல்லை. உருப்படியான ஒரு முடிவும் எடுக்கினமில்ல. எடுத்த முடிவுகளையும் நிறைவேற்றினம் இல்லை. பார்க்கப்போனால் இந்த இரண்டு கொமிற்றிகளும் தானாகச் செயலிழந்தது. அப்ப பேசிஎன்ன பிரயோசனம். தொடர்ந்து பேசி என்ன பிரயோசனம்.

அப்ப தலைவர் என்னைக் கூப்பிட்டார். கூப்பிட்டுச் சொன்னார் - பாலாண்ணை நாங்கள் இந்தப் பேச்சை இடைநிறுத்தம் செய்வம். இதற்குள் இன்னொரு விடயம் நடந்தது. வாஷிங்டனில் உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு என்றுகூறி சிங்களவரும் மற்றைய நாடுகளும் அங்கபோய், மாநாட்டில் பங்குபற்றிச்சினம். நாங்கள் போக இயலாது. ஏனெண்டு சொன்னால் அமெரிக்காவில் ஒரு தடை. அப்ப பிரபாகரன் சொன்னார் - பேச்சுவார்த்தைகளில் நாங்கள் சமபங்காளிகளாக, சம அந்தஸ்தோடு பேசிவிட்டுவருகிறம். அப்படியிருக்க ஒரு தரப்பை ஓரங்கட்டி ஒதுக்கிவிட்டு இப்படி மாநாடு நடத்தியது தவறு. ஆகவே, இதை நாங்கள் பிரச்சனையாக எடுத்து பேச்சுவார்த்தையை இடைநிறுத்திவிடுவோம் என்று சொன்னார். அவற்ர முடிவின்படி இடைநிறுத்தம் செய்துவிட்டோம்.

இந்தப் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தம் செய்துவிட்டு, நாங்கள் நல்லாயோசிச்சம். எங்களுக்கு நல்லாத்தெரியும் அம்மாவும், ஐயாவும் இழுபறிப்பட்டுக்கொண்டிருக்கினம். பாராளுமன்றத்துக்கும், ஜனாதிபதி ஆட்சிக்கும் இடையில் பிளவு, நெருக்கடியிருக்கு. இப்படி நிரந்தரமான தீர்வைத் தரக்கூடிய அரசுடன் நாங்கள் பேசுவோம். அம்மா சொல்றா தன்னிடம்தான் நிறைவேற்று அதிகாரங்கள் இருக்கு.

அடுத்ததாக சிறிலங்காவின் யாப்பு - ஒரு நிரந்தரத் தீர்வுக்கான ஒரு வழிமுறையைக் காட்டவில்லை. ஏனெனில் அதற்கு வரம்புகள், கடப்பாடுகள் போட்டுவைச்சிருக்கினம். இந்த யாப்பின் அடிப்படையில் தமிழர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாணமுடியாது என்று எங்களுக்கும் தெரியும். சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தெரியும்.

அப்படியும் தொடர்ந்து நிரந்தரத் தீர்வு பற்றிப் பேசினோம். அப்ப தலைவரும் நாங்களும் என்ன முடிவுசெய்தோம் என்றால், ஒரு இடைக்கால நிர்வாகம் - அது உருப்படியான இடைக்கால நிர்வாகத்தை தரச்சொல்லி நாங்கள் கேட்டோம். பேச்சுவார்த்தைகளை ஒத்திப்போட்டு நாங்கள் சொன்னோம்- இனிப் பேச்சுவார்த்தைக்கு நாங்கள் வருகிறதென்றால், நீங்கள் அதற்கு ஒரு இடைக்கால தீர்வுத் திட்டத்தை முன்வையுங்கள் என்று. அப்ப ரணில் மாறிமாறி இரண்டு தீர்வுத் திட்டங்களை அனுப்பிவைத்தார். அது எடுத்துப்பார்க்கப்போனால் உருப்படியான அதிகாரம் இல்லை. அதை நாங்கள் நிராகரித்தோம். அதைவிட்டு மூன்றாவது ஒன்றை வைத்தார்.

அப்ப பிரபாகரன் சொன்னார், அண்ணே, அவர்கள் ஒவ்வொன்றாக, ஒவ்வொன்றாக வைச்சுக்கொண்டுவருகினம், நீங்களும் ஒவ்வொன்று ஒவ்வொன்றாக நிராகரிச்சுக் கொண்டு வாறியள். மூன்றாவதை நிராகரிக்காமல் நாங்கள் ஒன்றைக் கொடுப்போம். உருப்படியான திட்டமாகக் கொடுப்பம் அவசரப்படத் தேவையில்லை. எல்லா நிபுணர்களையும் கலந்தாலோசிப்போம். எங்களுடைய மக்களைக் கலந்தாலோசிப்போம்.

எங்கடை பிரச்சனைகளை, எங்கள் மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்ப்போம். பொருளாதார சமூகப்பிரச்சனைகளைத் தீர்ப்பம். இடம்பெயர்ந்த மக்களின்ரை பிரச்சினைகளுக்கு புனர்வாழ்வு புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளக்கூடியதாக, அதிகாரம்மிக்கதாக ஒரு இடைக்காலத் தீர்வாகவிடுவம் என்று சொல்லி - வெளிநாடுகளிலிருந்த, எல்லா நிபுணர்களையும் சட்டநிபுணர்கள், யாப்பு நிபுணர்கள், புத்திஜீவிகள், வெளிநாடுகளிலிருந்த பெரிய அறிஞர்கள் மட்டுமல்ல, வெளிநாட்டைச் சேர்ந்த சில அறிஞர்களையும் கூப்பிட்டுக் கலந்தாலோசித்து, மூன்று நான்கு மாதங்களுக்குப் பிறகு ஒரு தீர்வுத்திட்டத்தை வரைந்து அங்க கொடுப்பம்.

இந்தத் தீர்வுத் திட்டம் கொடுத்து 3 ஆவது, 4 ஆவது நாள் அம்மா திடீரென ரணிலின்ரை அரசாங்கத்தின் மேல் பாஞ்சா. பாய்ந்து அவரிட்டை இருந்த மூன்று முக்கிய அமைச்சுக்களை பறிச்சிட்டா. ரணிலின் அரசு ஆட்டம் கண்டது.

அப்ப புலிகளிட்டை- இவ்வளவு காலமும் இவங்கள் வாயாலைதான் சொல்லிக்கொண்டுவாறாங்கள். இவங்கள் ஒரு தீர்வுத்திட்டங்கள் ஒன்றும் தரமாட்டாங்கள். இவங்கள் தமிழினத்தை தவிர வேறுஒரு பக்கமும்பாக்கமாட்டாங்க. புலிகளுக்கு உண்மையிலேயே இந்த அரசியல் தீர்வில் நம்பிக்கை இல்லை. சமாதானத்தில் நம்பிக்கை இல்லை. இதுகள் ஒரு பயங்கரவாதக் கும்பல். என்றெல்லாம் பிரசாரம் செய்து, நாங்கள் எவ்வளவு காலத்துக்குப் பிறகு முதன் முதலாக ஒரு தீர்வுத் திட்டத்தைக் கொடுக்கிறம். அது நிரந்தரத்தீர்வு இல்லை. ஒரு இடைக்காலத்தீர்வு ஒரு ஐந்துவருடங்களுக்கு. ஆனால் சிங்கள தேசத்தில் என்ன நடக்கிறது. பயங்கர எதிர்ப்பு. சிங்கள இனவாதக் கட்சிகள் என்று சொல்லிக்கொண்டு இந்தத் தீர்வுத் திட்டத்தை பார்க்கவும்கூடாது. இதை அடிப்படையாகவைத்து பேசவும்கூடாது. இந்தத் தீர்வுத் திட்டத்தில் தனி நாடுதான் புலிகள் கேட்கினம். வேறொன்றையும் கேட்கவில்லை.

ரணிலின் அரசாங்கம் சொல்லிச்சிது. இது கொஞ்சம் வித்தியாசமாகத்தான் இருக்குது. எங்கட திட்டத்திலும் பார்க்க, என்றாலும் இதை வைசசுப்பேசலாம் என்று அறிக்கை விட்டினம்.

ஆனால் கதிர்காமர் அம்மாவிடம் சேர்ந்துகொண்டு - பொது நலவாய நாடுகளின் அமைப்புக்களின் செயலாளர் பதவிக்கு அப்ளை பண்ணியவர். லேற்றா வந்த செய்தியைப் பார்க்கப் போனால் அவருக்குக் கிடைக்கவில்லைப்போல் இருக்கிறது. அது நல்லதொரு விடயம்.

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அவருக்கு ஏதோ பொறுப்போ, பதவியோ கொடுத்து கொழும்பு அரசியலில் இருந்து ஆளைக் கலைக்கவேணும். ஏனெண்டால் அம்மாவுக் கருகில் இருந்து சகுனி வேலை பார்த்துக்கொண்டு, எல்லாப் பிரச்சினையும் இவரால்தான் வருகுது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது தலைவர் ஒரு முக்கியமான விசயத்தைச் சொன்னார். ரணிலின் தந்திரோபாயத்தை அவர் விமர்சித்தார். ரணில்வந்து லேசான ஆளில்லை. சமாதானம் சமாதானம் என்று சொன்னாலும் புலிகளுக்கு எதிரான ஒரு சர்வதேச பாதுகாப்பு வலயத்தை உருவாக்குவதுதான் அவருடைய நோக்கம்.

உலக நாடுகளை எங்கடை பிரச்சினைகளுக்கு தலையிட வைப்பது. பெருமளவு எங்களுடைய பிரச்சினை உலகமயமானது ஒரு நல்ல விசயம். எங்களுடைய மக்களின் பிரச்சினைகளுக்கு ஆதரவு அளிப்பது நல்ல விசயம். ஆனால், உலக நாடுகளை அதில் தலையிட்டு நீங்கள் இப்படித்தான் செய்ய வேண்டும். இந்தப் பிரச்சினையை இப்படித்தான் சமாளிக்க வேண்டும், இப்படியான வரையறைக்குள்தான் தீர்வுகாண வேண்டும் என்று சொல்லி நிர்ப்பந்திப்பது - நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம்.

கூடுதலான நாடுகள், ஒஸ்லோவில் ஒரு மாநாடு நடந்தது. அதுவும் வந்து கடனுதவி அடிப்படையில்தான அந்த மாநாடு கூட்டுகினம், ஒஸ்லோவில் இருபது நாடுகள் வந்து இலங்கைக்கு இவ்வளவு கடனுதவி தருவம் என்று சொல்லுகினம். ஆனால், அதேநிலையில் இந்த நாடுகள் வந்து அரசியல் பிரகடனம் ஒன்றையும் செய்தினம். செய்துபோட்டு இந்தப் பிரகடனத்தின்படிதான் நீங்கள் போகவேண்டும் என்று ஒரு வற்புறுத்தலும் வரும். அழுத்தமும் வரும். கடைசியாக ரோக்கியோவில் நடந்த மாநாடு. அதற்கு நல்ல காலம், நாங்கள் போகவில்லை. அதில் சொன்னால், 52 நாடுகள் கூட்டிய அந்த மாநாட்டின் முடிவில் ஒரு அரசியல் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. அதில வந்து இன்னொரு வரையறைக்குள் இந்தப் பிரச்சினை தீரவேண்டும்.

அரசியல் காரணங்களுக்காக வன்முறையைப் பாவிக்கக் கூடாது. ஒற்றையாட்சியின்கீழ் தீர்வுகாணப்படவேண்டும் இப்படியான சில வரையறையில், எமது மக்களின் பிரச்சினை எந்த அடிப்படையில் தீர்வுகாணவேண்டுமென்பதை முடிவுசெய்யிறது எங்கடை மக்களாக இருக்கவேணும். வெளிநாடுகளாக இருக்கக்கூடாது. ஆனால், இஞ்சை என்னெணடு சொன்னால் ரணிலின்ரை சர்வதேச பாதுகாப்பு வலயத்திற்குள்ள சில நாடுகள் வந்து- அதுக்குள்ள அமெரிக்கா இருக்குது, இந்தியா இருக்குது, ஐரோப்பிய நாடுகள் இருக்குது, இவையெல்லாம் வந்து ரோக்கியோ உடன்படிக்கையில சில நிபந்தனைகளை விதித்து கட்டுப்பாடுகளை விதித்து, வரையறைகளை விதிச்சிருக்குது. இதில் 52 நாடுகள் கையெழுத்து இடுகுது. நாங்களும் அந்த மாநாட்டுக்கு போயிருந்தமெண்டுசொன்னால் - எங்களையும் அதில் கையொப்பமிட வைச்சிருப்பாங்கள். நாங்கள் போகேல்ல. நாங்கள் போகாததிற்கு வேறு காரணமிருக்குது.

அங்கு ரணிலின்ரை திட்டம் இதுதான். அதாவது இப்ப உலகத்தில என்ன நடக்குது என்று உங்களுக்குத் தெரியும். சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான் போர் எண்டு சொல்லி அமெரிக்காவும், அதனது நேச நாடுகளும் - ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் இறங்கி ஒரு பெரிய யுத்த சகதிக்குள்ள காலை வைத்து, படாதபாடுபடுகினம்.

ஆனால் அவையளும்- சிறிலங்காவில பேச்சுவார்த்தை மூலம் ஒரு பிரச்சினை தீரப்போகுது, இது நல்ல வழிமுறை. ஆகவே இதற்கு முக்கிய பிரசாரங்கள் செய்யப்படுகிறது. ரணில் இதை வந்து ஒரு கவர்ச்சிப் பொருளாகக் காட்டுறார்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அரசியலில்...





# தைவானின் சுதந்திரப் பிரகடனமும் வளரும் சீன - அமெரிக்க பகைமையும்

கே.ரீ.கணேசலிங்கம்

இருதுருவ அரசியல் - உலக அரசியலில் மறைந்த பின்னர், உலக ஒழுங்கு அமெரிக்கா தலைமையில் அணிவகுத்தாலும், சீனா ஒரு சவாலான அரசாக உலக ஒழுங்குக்குள் காணப்பட்டேவருகின்றது. சீனாவின் அரசியல், பொருளாதார, இராணுவ சித்தாந்தங்களில் ஆரம்பகாலப்போக்குகளில் மாற்றமும், போலித் தன்மையும் காணப்பட்டாலும், போட்டித்தன் மையில் தனித்துவம் பெற்றுவருகின்ற நாடாக அமைந்துள்ளது. சீனாவின் போக்கு சரியானதா? தவறானதா? என்பதை அலசுவதல்ல இக்கட்டுரையின் நோக்கம். மாறாக சீனா - தைவான் முறுகலும், அதில் அமெரிக்கா எடுத்துக்கொள்ளும் சிரத்தையும் எவ்வகையான பரிமாணத்தை ஏற்படுத்தக்கூடியதென்பதை நோக்குவதாகும்.

தைவான்மீது சீனா இராணுவரீதியான நடவடிக்கைக்குத் தயாராகிவிட்டதாகவும், தைவான் சுதந்திரநாடாக தன்னைப் பிரகடனப் படுத்தப்போவதாகவும் மாறிமாறி தகவல்கள் வெளிவந்தவண்ணமுள்ளன. தைவானின் சுதந்திர பிரகடனத்தை எதிர்த்து, சீனாவின் சிரேஷ்ட இராணுவ அதிகாரி எச்சரிக்கை செய்ததுடன், இராணுவரீதியான நடவடிக் கைக்கும் தயார் எனவும் அறிவித்தார். அதற் குத் தயாராகும் சீன இராணுவத்தினைப் போன்றே, தைவான் ஜனாதிபதியான சென் சூய் பியன்ஸ் (**Chen shui - bians**) - தைவான் மக்களிடம் பொதுஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி, சுதந்திரப் பிரகடனத்தைச் சாத்தியப் படுத்தலாமென இணையததளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. எனவே, இது ஒரு பெரும் நெருக்கடியைச் சீனாவுக்கு ஏற்படுத்தியுள் ளது. இந்த சந்தர்ப்பத்தில் தைவானின் வர லாற்றைச் சுருக்கமாக அவதானிப்போம்.

தைவான் 13,895 சதுரமைல் பரப்பைக் கொண்ட ஒரு தீவு. ஏறக்குறைய 21 மில்லியன் மக்கள் வாழும் அத்தீவில், 84 சதவீத மானவர்கள் தைவானியர்களும், 14 சதவீதமானவர்கள் சீனர்களும், ஏனைய பிரி வினர் 02 சதவீதமாகவுமுள்ளனர். பொருளா தாரத்தில் செழிப்புமிக்க தென்கிழக்காசிய நாடுகளில் தைவானும் ஒன்றாகும். **NIC** என்று அழைக்கப்படும் புதிய கைத்தொழில் வள நாடுகளின் பட்டியலிலும் தைவான் இடம் பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. தைவானின் ஆண்டுக்கான தேசிய உற்பத்தி ஏறக்குறைய 257 பில்லியன் அமெரிக்க டொலராகும். தேசிய உற்பத்திக்கான மூலதனம் மட்டும் 12,070 அமெரிக்க டொலராக உள்ளது. இதனால், தைவான் தனித்துவம் மிக்க அரசாக எழுச்சியடைய முயன்றுவருகின்றது.

இத்தகைய இயல்புகளைக்கொண்ட தைவானின் அரசியல், 1947 ஆம் ஆண்டு களுக்குப் பின்பே தனித்துவம் மிக்கதாக மாறியது. 1949 ஆம் ஆண்டு சீனா கம்யூனிஸ் டுகளிடம் வீழ்ந்ததைத் தொடர்ந்து, சீன தேசியவாதிகள் என்று கருதப்பட்ட சீனக் கம்யூனிஸ்டுக்களால் விரட்டப்பட்ட பிரிவினரே, தைவானை அரசியல் வலுவுடைய நாடாக மாற்றினர். ஆனால், சீனாவோ அதனைத் தனது ஒரு சுயாட்சிப் பிரதேசமாகவே கருதிவருகின் றது. தேசியவாதிகள் சீனாவுக்கும், தைவா னுக்குமான நெருக்கத்தைப் பாதிக்கும் விதத் தில் செயற்பட்டதுடன், தைவானின் அரசி யலை மேற்கு நாடுகளுடன் இணைத்துக் கொள்வதில் வெற்றிபெற்றனர். இதில் சியாங் கை ஷேக் (**Chiang kai - shek**) மிகப் பிரதான கொள்கை வகுப்பாளராகச் செயற்பட்டு வந் தார். தீவிர அரசியல் மாற்றம் எதனையும், மெதுவாகவே உள்வாங்கும் தைவானின் ஆட்சியாளர்கள், அதிகாரம் பொருந்திய ஆட்சிமுறைமையையே பேணிவந்தனர். 1975 களில் ஷேக் (**shek**) இன் மறைவையடுத்து அவரது மகனான சியாங் சிங் குவா (**Chiang ching - kuo**) ஆட்சிக்கு வந்தார். அவரது ஆட்சியில் சீனாவுடனான பொருளாதார, வர்த்தக் நெருக்கம் விரிவடைந்தது. இது சீனாவுக்கும் வாய்ப்பாக அமைந்ததுடன் சீனாவின் ஆட்சியாளரான டொங்சியாவே - பிங்ன் ஆட்சியில் மேலும் வலுவடைந்தது. இதன் பின்னர் 1988 ஆம் ஆண்டுகளில் குவா (**kuo**) வின் மறைவும் உப ஜனாதிபதியான லீ ரெங் குய் (**Lee teng - hui**) இன் அரசியல் நடவடிக்கைகளும், அரசியல் கட்சி அமைப் புக்களின் உருவாக்கமும் புதிய அதிகார முறைமைக்கு வாய்ப்பைக் கொடுத்தது. அதன் கீழ் தேசிய தனித்துவம் மிக்க அரசியலமைப் புக்கான வாய்ப்புக்கள் தைவானின் ஏற்பட் டதுடன், ஜனநாயக முறைமையின் வலு வூட்டல் விரிவடைந்து இருந்தபோதும், சீனா வுடனான பொருளாதார உதவிகள் தைவானி யருக்கு கிடைத்ததுடன், தைவான் மக்கள் சீனாவுக்கு சென்று வர்த்தக மற்றும் நடவடிக் கைகளை மேற்கொள்ளும் சூழல் காணப் பட்டது. தைவான் நாடாளுமன்றத்தினை தேர்ந் தெடுப்பதற்காக 1992 ஆம் ஆண்டில் நிகழ்ந்த தேர்தலில் தேசியவாதிகள் என்று கூறப்படும் பிரிவினரைச் சேர்ந்தவர்கள் 53 சதவீத வாக்கு களைப்பெற்றனர். பிரதான எதிர்க்கட்சியா னது, 31 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. எனவே, சீனாவுக்கு எதிரா னவர்களது வலு தைவானில் ஓங்கியிருப்ப தென்பது இதனூடாக புலனாகின்றது.

எனவே, தைவானின் அரசியல் நிலை அவ்வாறே வளர்ந்துவந்தது. ஆரம்பத்தி லிருந்து தைவானை ஆதரிக்கும் அமெரிக்கா- சீனாவுடன் தனக்கிருந்த உறவினை பராமரிப் பதற்கான நிரந்தர பாதுகாப்புறுப்புரிமை அந் தஸ்தை சீனாவுக்கும் கைமாற்றியது. ஆரம் பத்தில் அதனை தைவானியரே தக்கவைத் திருந்தனர். இது சீன - அமெரிக்க நெருக்கத் தின் போதே ஏற்பட்டதாகும். தற்போது, சீன- அமெரிக்க உறவு விரிசலடைந்து கொண்டிருப் பதாக புலப்படாது தென்பட்டாலும் சீனாவுக்கு எதிரான நடவடிக்கைகளாலேயே அமெரிக்கா மேற்கொண்டுவருகின்றது. ஆனால், தைவானா? சீனாவா? என்ற இழுபறியில் உண்மையி லேயே மறைந்திருப்பது அமெரிக்காவா - சீனாவா என்பதேயாகும்.

உலகத்தின் புதிய நாடுகளது வருகையை தவிர்க்க விரும்புவதாகக் கூறும் அமெரிக்கா தைவானின் சுதந்திரத்தை ஆதரிப்பதுடன் தைவானின் இராணுவப் பலத்தை பலப்படுத்தி வரும் பாரியமுயற்சியை எடுத்துவருகிறது. ஏனெனில், சீனாவுக்கு அண்மையில் தனது செல்வாக்கு பிரதிபலிக்கும் அரசொன்று அமைந்திருப்பது அவசியமானதென அமெ ரிக்க கருதுகிறது. இராணுவரீதியில் பலஸ்ரிக் (**Ballistic**) வகை ஏவுகணைத் தொழில் நுட் பத்தை தைவானுக்கு வழங்கியதுடன், இரா ணுவப் பயிற்சிகளையும், ஆயுத உதவிகளை யும் அமெரிக்கா தைவானுக்கு வழங்கிவருகி றது. இராணுவ தேவைகளைப் பூர்த்தி செய் யும் செயற்கைக் கோள்களை தாய்வான் பெற்றிருப்பதுடன், அடுத்த ஜனவரியிலிருந்து அமெரிக்காவிடமிருந்தும் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தை பெறுவதற்கான உடன்பாட் டில் இரு நாடுகளும் எட்டியுள்ளமை குறிப் பிடத்தக்கதாகும்.

எனவே, சீனாவுடனான உறவை உடைக்க விரும்பும் தைவானின் அணுகுமுறையை ஆத ரிக்கும் அமெரிக்கா - எதிர்கால சீனாவின் போக்கை எதிர்த்தே செயல்படுகின்றது. சீனா வின் இராணுவக் கடற்படை விரிவாக்கம் படிப் படியாக அதிகரித்துவருகிறது. அதன் நலன் தையே முழுமையாகப் புலப்படுத்தக்கூடியது. அதனைக் கண்டு அதிர்ந்துபோயுள்ள அமெ ரிக்கா தாய்வானின் அணுகுமுறையை ஊக்கு விப்பதற்கான நடவடிக்கையில் மீண்டும் ஈடு பட்டுவருகிறது. ஆரம்பத்திலிருந்து பலதடவை இவ்வாறு நடந்துகொண்ட தைவான், சீனாவின் நடவடிக்கையால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அதேபோன்றே, தற்போதும் சீனாவின் அணுகு முறைகள் நிகழ்ந்துவருகிறது. கடந்த புதன் கிழமை அமெரிக்க விஜயத்திற்குத் தயாரான சீனப்பிரதமர் வென் ஜியாபோ (**Wen jiabao**) அமெரிக்காவின் நடவடிக்கையைக் கண்டித் திருந்ததுடன், தைவானை எச்சரிக்கை செய்தி ருந்தார். அது தைவானுக்கல்ல என்பது நினைவுகூரத்தக்கது. அமெரிக்காவின் பொறுப் பையே சுட்டிக்காட்டியுள்ள சீனப்பிரதமரின் கண்டனம் தைவான் சுதந்திர பிரகடனத்தைத் தடுத்து நிறுத்துவதே நோக்கமாக உள்ளது.

சீனா அரசியல் ரீதியான நடவடிக்கை களை உலகம் முழுவதும் பிரச்சாரப்படுத்து வதும், நடவடிக்கையில் ஈடுபடுவதுமாக இருந் தாலும், இராணுவ நகர்விலும் தயாராகிக் கொண்டு வருகிறது. கடந்த காலப்பகுதியில் தைவான் - சீனக் கடற்பகுதியில் கடற்படை பயிற்சி ஒன்றை மேற்கொண்டதுடன், தாக்கு




கள் பசுபிக்கடலையும், இந்துசமுத்திரக்கட லையும் மையப்படுத்தி நகருகின்றது. அதி லும் இந்து சமுத்திரம் மிகப்பிரதான கடலா திக்க பிரதேசமாக சீனா மாறிவருகின்றது. மேலும், அண்டவெளி தொழில்நுட்பத்தில் மனி தனை விண்ணுக்கு வெற்றிகரமாக அனுப்பி சாதனை படைத்திருக்கின்றது சீனா. இதனால், சீனாவின் வளர்ச்சி பெருகுவதுடன், பொருளா தாரமும் வளர்ச்சி நோக்கியே நகருகின்றது. இதனை தடுத்துநிறுத்த வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும், இப்பிராந்தியத்தில் சீனாவின் தனித்துவம் பொருளாதாரத்தில் மட்டுமல்ல, அரசியல், இராணுவத்திலும் அதிகரித்துவரு கின்றது. வடகொரிய விவகாரம் அமெரிக்கா வுக்கு சாதாரணமான படிப்பினையை மட்டும் ஏற்படுத்தவில்லை மாறாக சீனாவின் பலத் தலை எப்படி நகர்த்தி முடிப்பதென ஈடுபட்டு முள்ளனர். அத்துடன் சீனாவின் படைகளை தைவான் - சீனா கடற்பிரதேசம் நோக்கி நகர்த்திவருவதுடன், அவற்றை ஒழிவுமறை வின்றி செயற்படுத்திவருகின்றது. 500 இற்கு மேற்பட்ட **ballistic** வகை ஏவுகணை நோக்கி சீனா நிறுத்தியுள்ளது. இது இராணுவ ரீதியில் பெரும் உபாயமாகும். வெளிப்படையாக நடந்துகொள்வதன் வாயிலாக மாற்று நட வடிக்கையை எதிர்பார்த்து செயற்படுவது தெளிவாகின்றது. குறுகியதூர ஏவுகணைகள் பலவற்றை தைவான் கடற்பகுதியில் நிறுத்தி வைத்துக்கொண்டு சீனா செயற்படுகின்றது.

இவை யாவற்றையும் அவதானித்தால், தைவானை மிரட்டும் நடவடிக்கையில் சீனா ஈடுபட்டுவருவது தெளிவாகும்.

இத்தகைய மிரட்டலூடாக கடந்த காலங் களில் தைவானின் சுதந்திரப் பிரகடனத்தை சீனா தடுத்து நிறுத்தியுள்ளது. ஆனால், இத் தடவை சீனாவின் போக்கு சற்று கடினமாகவே தென்படுகிறது.

2008 ஆம் ஆண்டில் ஒலிம்பிக்போட்டிக் குத் தயாராகிவரும் சீனா, அதிக எதிர் பார்ப்பை நோக்கி ஈடுபட்டுவருகின்றது.

ஒலிம்பிக்போட்டியை நிகழ்த்துவதைப் பயன்படுத்தியே தைவான் சுதந்திரப் பிட கடனத்தை ஏற்படுத்த விரும்புகிறது. ஆனால், சீனா போலியான கம்யூனிஸ நாடாக இருந்த போதும், தனது நலனுக்கு எதிராக ஈடுபட அது ஒருபோதும் பின்நிற்பதில்லை. தினமென் சதுக்க சம்பவம், கைனன் சம்பவம் இரண்டும் நினைவுகூரத்தக்கது. அந்தளவுக்கு சீனா செயற்படவல்லது. சீனாவின் நடவடிக்கை யைக் குறைத்து மதிப்பீடுசெய்ய முடியாது. ஆனால், ஆட்சியாளரும், அதன் அதிகார பீடமும் கொள்கின்ற நோக்கு எதுவோ அத னையே அமுல்படுத்தலிலும் காணலாம். சீனா அமைதியான முறையில் தைவானை சேர்த் துக்கொள்ள விரும்புகின்றது.

அவ்வாறே, ஹொங்ஹொங், மக்கோ பிரதேசங்களை இணைத்துக்கொண்டது. அதா வது, இரட்டை சீனா என்ற கொள்கையாகும். சீனா என்ற அரசுக்குள் இரண்டு அரசாங் கங்கள் இயக்கும். அதனையே, தைவானிலும் சீனா எதிர்பார்க்கின்றது. தற்போதிருக்கும் தைவானிலும் அதேநிலைதான் காணப்ப டுகின்றது. தனியான அரசாங்கமொன்று தைவானில் இயங்கிவருகின்றது. ஆனால், உத்தியோகபூர்வமாக அல்ல. சீனாவுக்கு எதிரான பிரிவினர் தைவானின் ஆட்சியதி காரங்களைப் பிடித்திருப்பதே சீனாவுக்குள்ள முரண்பாடாகும். மாறாக சீன சார்பு நிலையில் ஆட்சியதிகாரம் சாத்தியப்படுவதே இரட்டைச் சீனக் கொள்கையாகும்.

எனவே இரட்டைச் சீனக் கொள்கையை சாத்தியப்பாடற்றதாக ஆக்குவதில் அமெரிக் காவின் இரட்டைக் கொள்கை சார்ந்த நலன் முக்கிய பங்கை பெறுகின்றது. இதில் சீனா வின் போக்கு முற்றிலும் மாறுபட்டதொன் றாகவே அமையும். அவ்வாறு பலமான மாறு பாடுடைய கொள்கையை சீன அரசு நிராகரிக் குமாயின், பலமான மாறுதல் உலக அரசி யலில் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகும்.



பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் அவதார தினத்தையொட்டி யா/பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெற்ற "இசைவாணர்" கண்ணனின் மெல்லிசை நிகழ்வினைப் படத்தில் காணலாம்.

# அதிகாரமுள்ள, அங்கீகாரமுள்ள அரசுடனேயே.....

இஞ்சை பாருங்கோ...! இருபது வருசமாய் சண்டை பிடிச்ச நாங்கள் இப்ப கையை கோத்துக் கொண்டு நிக்கிறம். நீங்கள் வந்து எங்களுக்கு உதவியைச் செய்யுங்கோ என்று சொல்லி எமது பேச்சுவார்த்தையை ஒரு கவர்ச்சிப் பொருளாக்கி உலக நாடுகளை எங்களைச் சூழ கொண்டு வர வைச்சு, அவை மூலம் எங்களுக்கு சில வரையறைகளை போட்டு, எங்களை பணியவைக்க அழுத்தம் போட்டு இந்தப் பிரச்சினையை கையாளுவது தான் அவரது தந்திரோபாயம்.

இது ஒரு புதுவகையான சமாதானம் செய்யும் முயற்சி. அதாவது அவர்களுக்கு வேணும் வெளிநாடுகளிலை இருந்து நிதி. ஜப்பானில, எல்லா நாடுகளும் சேர்ந்து 4.5 வீதம் கடன் தாறம் அப்ப தென்னிலங்கையை பெரிசா கட்டியெழுப்பலாம். சிங்கள இராணுவத்தை பெரிசா கட்டிவளர்க்கலாம். இந்த தமிழற்ற பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

ஆகவே தமிழற்ற பிரச்சினையை ஓரங்கட்டிவிட்டு சர்வதேசரீதியாக, பெரிய நாடுகளை அரவணைச்சு அவர்கள் மூலம் விடுதலைப் புலிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முயலுகிறார். இதைத்தான் தலைவர் தன்ர அறிக்கையில் கண்டிக்கிறார்.

தலைவற்ற அறிக்கையை பார்த்தீங்கள் எண்டு சொன்னால், சந்திரிகாவையும் ரணிலையும் சேர்த்து அவர் கண்டிக்கிறார். நாங்கள் பக்கச் சார்பாக நிக்கேல்ல. சிங்களத் தலைமை எங்கட மக்களுக்கு உருப்படியான ஒண்டும் செய்யேல்லை. இப்ப மாத்திரமில்லை. ஐம்பதாண்டு காலமாக இதுதான் பிரச்சினையென்பதை அவர் தெட்டத்தெளிவாக சொல்லுறார்.

ஆனால், இப்ப என்னெண்டு சொன்னால் - ரணிலின்ர அரசு பேச்சுவார்த்தையை ஒரு கவர்ச்சிப் பொருளாக்கி உலக நாடுகளை இதிலை தலையிட வைத்து, எங்களுக்கு அழுத்தங்களைப் போடுற ஒரு யுத்தியையும் கையாளுது எண்டு சொல்லி சுட்டிக்காட்டுறார்.

இந்த சர்வதேச பாதுகாப்பு வலயத்தில் இந்தியாவுக்கும் ஒரு முக்கிய பங்கு இருக்கிது. இந்திய மத்திய அரசை மாத்திரமில்லை தமிழ் நாட்டு அரசையும் இந்தத் திட்டத்திற்கு கொண்டுவாறதிற்கு ரணில் ஐயா திரியிறார்.

நீங்கள் பார்த்திருப்பியள் எங்கட ரணில் ஐயா இடைக்கிடை சென்னைக்குச் சென்று அங்கை போய் குண்டம்மாவையும் இரகசியமாய் சந்தித்தித்துவிட்டு வாறார். இந்த இரண்டு பேருக்கு மத்தியிலையும் என்ன நடக்கிது எண்டு எனக்குத் தெரியாது.

ஐயா கவனமாய் இருக்க வேணும். இல்லையெண்டு சொன்னால் நசிபட்டுச் செத்துப் போய்விடுவார். இராமேஸ்வரத்திற்கும் மன்னாருக்கும் மத்தியில் ஒரு பாலம். ரணில் ஐயா பெரியதொரு திட்டம்.

குண்டம்மா வந்து காவேரித் தண்ணியை தமிழ்நாட்டு மக்களுக்கு கொடுக்கிறதுக்கு முடியாமல் கஷடப்படுகிறார். ஆனால், பாக்குநீரிணைக்கு மேல ஒரு பாலம். ரணில் ஏன் இந்த பாலத்திற்கு ஓடித்திரியிறாரோ எனக்கு விளங்கேல. ஏனென்றால், தரைப் பாதையொண்டு இருந்துதெண்டால் அடிக்கடி காரை எடுத்துக் கொண்டு தமிழ் நாட்டுக்குப் போய்வாற திட்டமோ தெரியாது.

அப்ப நாங்கள் யோசிச்சம், என்ன செய்யிறது? பேச்சுவார்த்தையை இடைநிறுத்தியாச்சு. ஒரு நிரந்தரத் தீர்வு வாறதெண்டு சொன்னால் ஒரு பலமான அரசு மத்திய அரசு அங்க இருக்க வேணும்.

இந்த அரசியல் யாப்பு தூக்கி எறியப்பட வேணும். இந்த அரசியல் யாப்புக்குள்ள தீர்வு காண முடியாது. உங்களுக்கு நல்லாத் தெரியும் - அது சிங்கள மொழியை, பௌத்த மதத்தை, சிங்கள பெரும்பான்மை ஆட்சியைத்தான் வலியுறுத்தி வந்திருக்கிறது. எனவே இந்த யாப்புக்குள்ள தீர்வுகாண முடியாது.

அப்ப ஒரு புதுவழி தேவை. புது யாப்பொன்று செய்யப்பட வேண்டும். அது ரணிலாலும் முடியாது. அம்மாவாலும் முடியாது. ஏனெண்டு சொன்னால் இந்த யாப்பில் இருக்கிற அதிகாரங்கள் அம்மாவுக்கு வேணும். இதில் பயங்கரமான அதிகாரங்கள் இருக்குது.

ஆக்வே அம்மா இந்த யாப்பை மாத்த தயாரில்லை. ஐயாவும் யாப்பை மாத்த விரும்பேலை. ஏனெண்டு சொன்னால் இன்னும் இரண்டு வருசத்தில அவர் ஜனாதிபதியாகிற எண்ணத்தோடு இருக்கிறார். அம்மாவிற்கு இருக்கிற நிறைவேற்று அதிகாரத்தை தானும் வைச்சிருக்க வேணும். ஆகவே அவருக்கும் இதை மாத்திற நோக்கம் இல்லை. அப்ப என்னெண்டு ஒரு நிரந்தரத் தீர்வு வரும்.

இதை நாங்கள் எல்லா வெளிநாடுகளுக்கும் சொல்லுறம். சிங்கள ஆளும் வர்க்கம், சிங்கள அரசியற் கட்சிகள் அரசியல் அமைப்பையே தலைகீழாக மாத்தி தமிழ் மக்களுக்கு பூரண சுயாட்சியை கொடுக்கிற தீர்வுத் திட்டத்தை முன்வைக்க தயாராயில்லை.

ஏனெண்டு சொன்னால் சிறிலங்காவின் அரசியல் அமைப்பை மாத்த இவர்கள் தயாராயில்லை. இது ஒரு அளவில் வெளிநாடுகளுக்குத் தெரியும். இதனடிப்படையிலதான் நாங்கள் யோசிச்சம். ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பை உள்ளடக்கிய ஒரு நிர்வாக ஆட்சியையாவது எடுப்பம். வேறவழியில்லை.

ஏனெண்டால் எங்கடை சனங்களும் களைச்சுப்போச்சு. இருபது வருட யுத்தத்தில் எங்கட மக்கள் பட்ட அவலங்களை நான் சொல்லத் தேவையில்லை. நீங்கள் எல்லாம் அனேகமாக யாழ்ப்பாணத்தை வன்னியெல்லாம் போய்ப்பார்த்திருப்பியள். அங்கத்தை அழிவு நிலையை.

ஆகவே ஒரு சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தி எங்கட மக்களின்ர பொருளாதார வாழ்வை வளம்படுத்தி ஒரு நீதியான நியாயமான தீர்வொன்றைத் தேடிப்பாப்போம்.

சமாதான முயற்சியில முயற்சித்து பார்ப்போம் எண்டு உண்மையாக நேர்மையாக நாம் இந்த முயற்சியை எடுக்கிறம். இதை அடிக்கடி வெளிநாட்டு பிரதிநிதிகள், ராஜதந்திரிகளுக்கு நாங்கள் சொல்லுறம்.

ஆனால் அதிலையும் சந்தேகம். சமீபத்திலை இந்த ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த கிறிஸ்பற்றன் போய் பிரபாகரனை சந்திக்கேக்கை அவர் ஆறு தடவை திருப்பி திருப்பி சொல்லியிருக்கிறார். நாங்கள் சமாதானத்தில உறுதியாய் நிற்கிறமெண்டு.

ஆறு தடவையல்ல நூறு தடவையும் இதை நாங்கள் சொல்லத் தயார். உண்மையில நேர்மையாக நாங்கள் நிற்கிறம். ஏனெனில் அப்படியான தேவை எமக்கு இருக்குது. எங்கடை மக்களின்ர சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதற்கான சூழ்நிலையொன்று தேவையாகவுள்ளது.

அதற்காகத்தான் இந்த இடைக்கால நிர்வாகத் திட்டத்தை போட்டு உலக நிபுணர்களோடு கதைச்சு இதைச் சமர்ப்பித்திருக்கிறம். இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பற்றி நான் விபரமாக சொல்லத் தேவையில்லை.

அதின்ர முக்கியமான விபரம் என்னென்று சொன்னால் இது புதுமையான விடயம். அரசியல யாப்புக்குள்ள இதை அடக்கேலாது. யாப்பிற்கு வெளியே தான் அடக்க முடியும். நாம் அதில நியாயமான அதிகாரங்களைக் கேட்கிறம்.

ஏனெணடால் வசதியான அதிகாரம் இல்லாமல் வடக்கு கிழக்கில் ஒரு நிர்வாகத்தைச் செய்யமுடியாது. ஏற்கனவே எங்களுக்கொரு தன்னாட்சி அதிகாரசபை இருக்குது. வடக்கு கிழக்கின்ர பெரும் பகுதியில எங்கண்ட ஆட்சி நடக்குது. எங்களிட்டை அந்த அதிகாரம் இருக்குது.

எங்களுக்கெண்டு பொலிஸ் எங்களுக்கொண்டு ஒரு இராணுவம் என்பவற்றைக் கொண்டு தன்னாட்சி அதிகாரமொண்டு அங்கை நடந்து கொண்டு இருக்கது. இப்ப நாங்கள் கேட்பது வடக்கு - கிழக்கில இராணுவ கடட்டுப்பாட்டு பிரதேசத்திலையும் தமிழ், முஸ்லீம், சிங்கள மூவின மக்களும் ஒன்றுமையாகச் சேர்ந்து வாழக்கூடிய நிலையை.

ஆனால் புலிகளின் கையில அந்த அதிகாரம் இருக்கக் கூடிய முறையில இந்தத் திட்டத்தை நாம் வைத்துள்ளோம். அதுவும் வந்து இறுதியான, உறுதியான ஒரு திட்டமில்லை. அது ஒரு வரைபு. இதை மேசையில வைச்சு பேசத்தான் கேட்கிறம். ஆனால் சிங்கள இனவாதக் கட்சிகள் இது ஒரு தனிநாட்டுக்கான படியென்று சொல்லி அதை நிராகரிக்குது.

இதில முக்கியமான விசயம் என்னெண்டு சொன்னால் இந்தியாவிலை இருந்தும் எங்கண்ட இந்த தீர்வுத் திட்டத்திற்கு பலத்த எதிர்ப்பு வருகிறது. அங்க சில மலட்டு எழுத்தாளர்கள் இருக்கினம். சில கிழட்டு ராஜதந்திரிகளும் இருக்கினம். டிக்சித் அப்படியான ஆக்கள். நாங்கள் நினைக்கிறம் அவங்களுக்கு பென்சனைக் கொடுத்து வீட்டை அனுப்பி போட்டாங்களெண்டு. அவங்கள் வீடுகளிலை இருந்து கொண்டு குழப்பிறாங்கள்.

இப்ப சமீபத்தில ராஜ்கோத்ரா என்று முந்தின வெளிவிவகார காரியதரிசி. அவர் முந்தநாள் கொழும்பில ஒரு மாநாடு வைச்சவர். அதுவும் கதிர்காமர்தான் இந்த மாநாட்டை கூட்டி புலிகளுக்கு எதிரான ஆக்களை கூட்டிவந்து இந்த மாநாட்டிலை வைத்து எங்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்கிறார்.

அதில அவர் சொல்லியிருக்கிறார். என்னெண்டு சொன்னால் புலிகளுக்கு ஒரு எச்சரிக்கை கொடுத்திருக்கிறாராம். நீங்கள் இந்திய மீனவர்களைக் கைது செய்கிறீர்கள் இப்பிடிச் செய்து இந்தியாவிற்கு ஆத்திரமூட்டாதையுங்கோ எண்டும் சொல்லுறார்.

சரி எங்களுக்கென்ன இந்திய மீனவர்களைப் பிடிக்கிறது தொழிலே. அவை எங்கடை கடல் எல்லைக்குள்ள வருகினம். எங்கண்ட மீனவர்களின் கடல்வளங்களை அள்ளிக் கொண்டு போகினம். சில சமயங்களில மீன் வலையையும் வெட்டிப் போட்டுப்போகினம். இவையளால பெரிய தொந்தரவு.

அப்படி இருக்கேக்க எங்கட மீனவர்கள் அதாவது தமிழீழத்தில இருக்கிற மீனவர்கள்தான் இவர்களை கைதுசெய்து வந்து எங்களிட்டை கையளிக்கினம். அப்ப நாங்கள் என்ன செய்கிறம். இவையளை அப்படியே இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுவிக்கிறோம்.

நாங்கள் போய் இந்திய மீனவர்களுக்கு தொந்தரவு கொடுக்கிறதோ அவர்களைக் கைதுசெய்து கொண்டு வாறதோ இல்லை. அப்படியிருக்க இவர் இப்படி ஒரு அறிக்கை விடுகிறார். நான் ஒரு விசயத்தை இங்கை தெளிவாகச் சொல்ல விரும்புறன். இந்தியாவைப் பொறுத்த வரையிலே.

இந்தியாவை ஆத்திரமூட்டி பகைத்துக்கொள்ள நாம் விரும்பவில்லை. இந்தியாவை தொடர்ந்தும் ஒரு நட்பு சக்தியாக ஒரு தேச சக்தியாகத்தான் அணுகுகிறோம் கருதுகிறோம்.

இந்தியாவின் தேசிய நலன்களுக்கோ அல்லது இந்தியாவின் புவியியல் கேந்திர நலன்களுக்கோ அல்லது பொருளாதார நலன்களுக்கோ குந்தகம் செய்ய நாங்கள் விரும்பேல்ல.

ஆனால் நாங்களொண்டு இந்தியாவை கேட்டுக்கொள்ள விரும்புகிறோம். அதாவது தமிழரின் இனப் பிரச்சினையைப் பொறுத்தளவில் இநதியாவின் வெளியுறவுக் கொள்கை, அணுகுமுறை மாறவேண்டும் என்றுதான் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

தற்போது சமாதான முயற்சியில இந்தியா குறிப்பிடத்தக்க பங்கு அளிக்க வேண்டுமாக இருந்தால் புலிகளை ஓரங்கட்டி ஒதுக்கிவிட முடியாது.

ஏனெனில் புலிகள்தான் மக்களின் உண்மையான பிரதிநிதிகள். அவர்களை ஒதுக்கி ஓரங்கட்டி பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி அவர்களை ஒரு விரோத சக்தியாகப் பார்த்து இந்தியா எமது பிரச்சினைக்கு எந்தவொரு உருப்படியான பங்களிப்பையும் செய்ய முடியாது. இதுதான் யதார்த்தம்.

ஆகவே இந்திய அரசாங்கம் இலங்கைப்பிரச்சினையில ஒரு முக்கிய பங்கு வகிக்கவேண்டும் என்று சொன்னால் புலிகளுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

பழைய வெளியுறவுக் கொள்கைகளை கைவிட்டு புதிதாக சிந்திக்க வேணும். புதிய அணுகுமுறைகள் வேணும். இன்னொரு விசயத்தை நாங்கள் இந்திய அரசாங்கத்திற்கு சொல்ல விரும்புகிறோம்.

இப்போது நான் பேசிக்கொண்டிருக்கிற பேச்சுக்களை புலனாய்வாளர்கள் வந்து ரேப்பண்ணுவினம் என்று எனக்குத் தெரியும்.அதால இந்தச் செய்தி இந்திய அரசாங்க மட்டத்திற்கு போறது நல்லது. புலிகள் என்ன நினைக்கினம் எண்டு.

(10 ஆம் பக்கம் பார்க்க)


## பணிநிலை வெற்றிடம்

**நிதித்துறையின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன**

| பணிநிலை | தகைமைகள் |
|---|---|
| 01. கணக்காளர்<br>02. கணக்காய்வாளர்<br>03. மேலாளர் | 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமானி அல்லது தொழில் நிர்வாகமானி அல்லது பொருளியல் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>2. உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பூர்த்தி செய்திருக்க வேண்டும். |
| 04. மேலாளர் - கணினி | 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணினித்துறையில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>2. அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தின் கணினிச் சான்றுடன் கணினித்துறையில் ஈராண்டுப் பட்டறிவு இருத்தல் வேண்டும். |
| 05. அலுவலர்<br>06. கணக்குப்பதிவாளர்<br>07. எழுதுநர் | 1. க.பொ.த (உயர்தர) இல் பொருத்தமான பிரிவில் 3 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 08. கணினித்தரவு பதியுநர் | 1. க.பொ.த (உயர்தர) இல் சித்தியடைந்திருப்பதுடன் எம்.எஸ்.ஒபிஸ் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| 09. அலுவலக உதவியாளர் | 1. க.பொ.த (சாதாரண) இல் தமிழ்,கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். |

**நேர்முகத்தேர்வு இடம்: வருவாய்ப்பகுதிச் செயலகம் யாழ்ப்பாணம்.**
(கைலாயபிள்ளையார் கோயில் அருகாமை)

| காலம் : | | | பணிநிலைகள் |
|---|---|---|---|
| 11.12.2003 | வியாழன் | காலை 10மணி | 01 02 03 04 |
| 12.12.2003 | வெள்ளி | காலை 10மணி | 05 06 07 08 09 |

பொருத்தமான விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தன்வரலாறு (சுயவிபரம்), சான்றிதழ்களுடன் சமூகம் தரவும்.

குறிப்பு : நேர்முகத்தேர்வின் முன்னர் விண்ணப்பதாரிகள் அனைவருக்குமான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு நடைபெறும்.

07.12.2003

**நிதித்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வேலணை-துறையூர் கடற்படைமுகாம் மீளப் புனரமைக்கப்பட்டு வருகின்றது!

## வீதியோரங்களிலுள்ள மரங்கள், பற்றைகள் துப்புரவு

(யாழ்ப்பாணம்)

வேலணை துறையூர், கடற்கரையை அண்டியுள்ள பகுதியில் அமைந்துள்ள கடற்படைமுகாம் மீளப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

முகாமைச் சுற்றிப் புதிய முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு வருவதுடன் முட்கம்பிச் சுருள்களும் அதனூடாக சுற்றி இடப்பட்டுள்ளது. அத்துடன், பிரதான வீதியின் மேற்புறமாகவும் தற்போது புதிய முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு - முட்கம்பி சுருள்களும் போடப்பட்டுள்ளது.

இந்த முகாமின் அருகிலே பாடசாலை ஒன்று அமைந்துள்ளதுடன், இந்தப் பகுதியில் முன்னர் அமைக்கப்பட்டு மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பிவேலியில் பாடசாலை மாணவன் ஒருவன் சிக்குண்டு காயப்பட்டதுடன், அதன்பின்னர் மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து அந்த வேலி அகற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# விடுதலைப் புலிகளை மத்திய அரசு எச்சரிக்கை செய்யவேண்டுமாம்!

## ஜெயலலிதா வாஜ்பாய்க்கு கடிதம்

தமிழக மீனவர்களை கடத்தும் செயலில் ஈடுபடவேண்டாம் என்று விடுதலைப்புலிகளை மத்திய அரசு எச்சரிக்கவேண்டும் என்று - இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் வாஜ்பாய்க்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று அனுப்பிய கடிதத்தில், இலங்கைக் கடற்படையினரும், இலங்கை மீனவர்களும் அடிக்கடி தமிழக மீனவர்களை கடத்திச் செல்வதைத் தடுக்கக்கோரி பலமுறை தங்களுக்கு கடிதம் எழுதியுள்ளேன்.

இந்தக்கோரிக்கை தொடர்பாக கடந்த 16 ஆம் திகதியும் கடிதம் எழுதியிருந்தேன். இந்தச் சூழ்நிலையில் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 32 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்ததாகத் தகவல் வெளியானது. ஆனால், அந்த மீனவர்கள் திரும்பவந்தபிறகு அவர்களைக் கைதுசெய்தது விடுதலைப் புலிகள் எனத் தெரியவந்துள்ளது.

தமிழக மீனவர்களை விடுதலைப் புலிகள் கைதுசெய்தது - தமிழகப் பாதுகாப்புக்கு மட்டுமல்லாது, இந்தியாவின் இறையாண்மையையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

எனவே, தமிழக மீனவர்களை கடத்தும் செயலில் ஈடுபடவேண்டாம் என்று, விடுதலைப் புலிகளுக்கு மத்திய அரசு எச்சரிக்கை செய்யவேண்டும்.

மேலும், மன்னார் வளைகுடாக் கடற்பகுதியை விடுதலைப் புலிகளின கடற்புலிகள் ஆக்கிரமித்துள்ளனர்..

மன்னார் வளைகுடாப் பகுதியில் இலங்கை மற்றும் இந்தியக்கடற்படையினர் கூட்டு ரோந்துவர ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் வாஜ்பாய்க்கு எழுதிய கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

### இராணுவத்...

செய்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பாதுகாப்புத் தொடர்பில் இணக்கம் ஒப்பந்தம் ஒன்றிற்கான இணக்கத்தினை எட்டியிருக்கின்றார்.

நடைமுறையில் இந்தியக் கடற்படையும் இலங்கைக் கடற்படையும் புரிந்துணர்வுடன் செயற்பட்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இராணுவத் தளபதியுடன் இராணுவப் புலனாய்வு இயக்குநர் பிரிகேடியர் கபில செரந்த விதாரனவும், பயிற்சி இயக்குநர் சிறிநாத் ராஜபக்ஷவும் இந்தியா சென்றுள்ளனர். (01)

### ஜனாதிபதிக்கு...

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்க முன்னர் ஜனாதிபதி தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பல குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவர் அப்பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் புலிகள் நல்ல பிள்ளைகளாகி விட்டனர். அவர்கள் மீது எந்தக் குற்றச்சாட்டையும் ஜனாதிபதி தெரிவிப்பதில்லை.

குறிப்பாக ஜனாதிபதி இதுவரை அவர்கள் மீது கொண்டிருந்த நிலைப்பாட்டை மாற்றியமைத்துள்ளார். இது வரவேற்கத்தக்கதொரு விடயம்.

நாட்டில் சமாதானத்தினை ஏற்படுத்த அவர் முயன்றால் அது மேலும வரவேற்கத்தக்கதாக அமையும் என அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பலரும் கலந்துகொண்டதாகத் தெரியவருகிறது.

## களனி பல்கலைக்கழகத்தில்

# மாணவர்களிடையே மோதல் ஆறு மாணவர்கள் காயம்!

(கொழும்பு)

களனி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அடிதடியில் 6 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். பல்கலைக்கழக கட்டடங்கள் பலவும் சேதம் அடைந்துள்ளன.

நேற்று களனி பல்கலைக்கழக விஞ்ஞானபீட புதிய மாணவர்களுக்கான விருந்துபசார நிகழ்வில் கைகலப்பு ஏற்பட்டது. இச்சம்பவங்கள் தொடர்பாக நேற்று மாலை நடைபெற்ற பேச்சுவார்த்தையில்,

களனி பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை பொலிஸாரின் விசேட பாதுகாப்புடன் நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதாக, களனி பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறான பதற்ற நிலமைகளை தவிர்ப்பதற்கு பல்கலைக்கழக கல்வி தவிர்ந்த அனைத்துச் செயற்பாடுகளையும் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

புதிய மாணவர்களின் விருந்துபசார நிகழ்வில் ஏற்பட்ட கைகலப்பானது அடுத்த வாரம் இடம்பெறவுள்ள கலை விழாவினை குழப்புவதற்காகவே, சிலர் கைகலப்பில் ஈடுபட்டதாக களனி பல்கலைக்கழக மாணவர் சங்கம் தெரிவிக்கின்றது.

நடைபெற்ற பல்கலைக்கழக கைகலப்பில் வெடிபொருட்கள் பயன்படுத்தப்பட்டு இருந்தன என, பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பிரச்சினைகளால், விரிவுரைகள் பாதிப்புக்கள் ஏதுமின்றி நடைபெற்றன.

பல்கலைக்கழக பரீட்சைகள் நடைபெறவுள்ள இந்தத் தருணத்தில் மாணவ குழுக்களுக்கிடையே ஏற்பட்டுள்ள இந்தச் சர்ச்சையை சுமுகமான நிலைக்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதாகவும் சிரேஷ்ட விரிவுரையாளர் ரிக்கிரிபண்டார குணதிலக தெரிவித்தார்.

### நிறைவேற்று...

திகதி ஜேர்மனியத் தேர்தல் முறைமைபற்றி அறிந்துகொள்வதற்காக இலங்கையிலிருந்து செல்லவுள்ள நாடாளுமன்றக் குழு திரும்பியதும் இதற்கான தகுந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுத் தீர்வு எடுக்கப்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது. (01)

### புலமைப்பரிசில்...

வழங்கியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உதவி பரீட்சை ஆணையாளர் ஈ.டி. அனுர அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். நாடளாவியரீதியில் நேற்று நடைபெற்ற 5 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சுமார் 3 இலட்சம் மாணவர்கள் தோற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அரசியல் இழுபறிநிலை...

புக்கள் யாராவது ஒருவருக்கே இருக்கவேண்டும். அப்போதுதான் அதனை தடையின்றி முன்னெடுக்க முடியும். ஆனால், அதிகாரம் யாரிடம் என்பது புரியாமல் மக்கள் திண்டாடுகின்றனர். இப்பிரச்சினைக்குச் சரியான தீர்வுகாணவேண்டும். இல்லையெனில், மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

சமாதானத்தின் மூலம்தான் தற்போது பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணத்தினாலேயே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வருகின்றனர். சமாதான செயற்பாடுகள் இழுத்தடிக்கப்படுமானால் அது பாரிய பிரச்சினையாக எழும். இலங்கையில் இருந்து நிதியானது, தற்போது சிறிது சிறிதாக வெளியேற ஆரம்பித்துள்ளது.

இதன் காரணத்தினால் ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்தி தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாணவுள்ளோம்.

எமக்கு முன் ஆட்சிபுரிந்த அரசாங்கம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திவிடுவதாகத் தெரிவித்து முழுக் கவனத்தையும் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்துப் பெரும் அழிவுகளை உண்டு பண்ணியது.

நாட்டின் பொருளாதாரத்தை படுபாதாளத்துக்குள் தள்ளியதே தவிர, ஆக்கபூர்வமாக எதனையும் செய்யவில்லை.

எமது அரசாங்கம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதில் மிகுந்த உறுதியுடன் செயற்பட்டு வருகின்றது. அதற்காக அரச நிறுவனங்களில் உள்ள மேலதிக வேலையாட்களை நிறுத்துவதற்கும் முயல்கின்றது.

இத்தகைய வேலைவாய்ப்பை வழங்குவதற்கு நிலையான கொள்கைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் வகுக்கவேண்டியுள்ளது.

அதற்கான முயற்சியில் எமது அரசாங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (01)

# அதிகாரமுள்ள, அங்கீகாரமுள்ள அரசுடனேயே.....

காலம் காலமாக இந்தியாவைப் பகைத்து, இந்தியாவிற்கு விரோத சக்திகளாக இருந்த சிங்களக் கட்சிகளும், சிங்கள இனவாத சக்திகளும் - இப்பொழுது இந்தியாவுக்கு நேசக்கரம் நீட்டுது. எல்லாப் பிரச்சினைகளுக்கும் இந்தியாவிடம் ஓடவேண்டுமென்று சொல்லினம். இந்தியா இலங்கை வந்து, தலையிடவேண்டும் என்று சொல்லினம்.

மீண்டும் இந்த இனப்பிரச்சினையில் இந்தியாவை தலையிடவைத்து, இந்தியாவையும் புலிகளையும் முரண்படவைச்சு மீண்டும் இந்திய இராணுவ தலையீட்டிற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கத்தான் இந்த சிங்களச் சக்திகள் விரும்புது.

ஆகவே இப்படியான சீண்டுகளால் ஏவப்பட்டு இந்திய அரசாங்கம் மீண்டும் ஈழத் தமிழ்மக்களை பகைத்துக் கொள்ளக்கூடாது.

நாங்கள்தான் இந்தியாவின் உண்மையான நேசசக்தி. ஏதோ ஒரு காலத்தில் எமது விடுதலை இயக்கத்திற்கும், இந்திய அரசிற்கும் - அதுவும் ராஜீவ்காந்தி நிர்வாகத்திற்கும் மத்தியில் சில பிணக்குகள் ஏற்பட்டு போரே வெடித்தது. இரண்டு பக்கத்திலையும் தவறுகள் இருக்கலாம். அது எல்லாத்தையும் மறந்து இன்றைய புதிய யுகத்தில் இந்தப் புதிய சகாப்தத்தில் இந்தியா தனது வெளியுறவுக்கொள்கையை மாத்தி ஈழத்தமிழ் மக்களுக்கு நேசக்கரத்தை நீட்டி, புலிகளுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ளுமாறு நாங்கள் அன்பாக இந்தியாவை வேண்டுகிறோம்.

அடுத்ததாக தலைவருடைய அறிக்கை, தலைவர் போர்நிறுத்தம் பற்றி, போர்நிறுத்தத்தினால் மக்களுக்கு இயல்புநிலை தோன்றவில்லை. உண்மையான அமைதிநிலை தோன்றவில்லை. சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்கிறது. இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளும் தீரவில்லையெண்டு போர்நிறுத்தத்தை கடுமையாக விமர்சித்தாலும் போர்நிறுத்தத்தை உறுதியாக, இறுக்கமாக பேணிவருவதில எவ்வளவு சிரத்தை காட்டுகிறார் என்பதை உங்களுக்கு தெளிவாய் எடுத்துச்சொல்லியிருந்தார்.

அடுத்ததாக இந்த பேச்சுவார்த்தை. இந்தப் பேச்சுவார்த்தைகளு நாங்கள் போகத்தயார். ஒரு இடைக்கால சுயாட்சி அதிகாரசபை பற்றியதொரு திட்டத்தை குடுத்திருக்கிறம். இந்தத் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு சிங்கள அரசு பேசவந்தால் நாம் பேசப்போகத்தயார்.

ஆனால் ஆரோடு பேசுறது. அரசாங்கமெண்டு ஒன்று இருக்கே? சிங்கள அதிகார மட்டம் இரண்டாக பிளவுபட்டு கிடக்குது. அம்மாவும் ஐயாவும் இழுபறிபட்டுக்கொண்டு இருக்கினம்.

நேற்றும் ஒரு பேச்சுவார்த்தையில் அம்மாவும், ஐயாவும் பேசியிருக்கினம். எந்தவிதமான சமரசமும் ஏற்படவில்லை. அப்ப நாங்கள் யாரிட்டைப் பேசிறது. பேசிறது எண்டு சொன்னால் இரண்டு முக்கிய அம்சங்கள் வேண்டும்.

ஒன்று சிங்கள மக்களின் ஆணை பெற்ற அரசாங்கத்தோட பேசவேணும். அடுத்ததா அந்த அரசாங்கத்துக்கு நிறைவேற்று அதிகாரம் இருக்கவேண்டும். இது இரண்டும் இல்லாத ஒரு குழப்பநிலை அங்கயிருக்குது. ஏன் இந்தக் குழப்பநிலை வந்ததெண்டு பார்க்கப்போனால் - தமிழரின் பிரச்சினையை மையமாக வைத்துக்கொண்டுதான் இந்த இழுபறி, இந்த அதிகாரப்போட்டி, இந்தப் பலப்பரீட்சை நடக்குது.

அப்ப தலைவர் சொல்லுறார் இது ஒரு வரலாற்று நாடகம். எங்கட தந்தை செல்வா காலத்திலையிருந்து இப்ப தம்பி பிரபா காலம்வரை தொடர்ச்சியாக ஐம்பதாண்டுகளாக மாறிமாறி இதே நாடகம்.

ஆட்சியில் இருக்கிற ஒரு கட்சி தமிழருக்கு ஒரு தீர்வைக் கொண்டு வரலாமெண்டு வெளிக்கிடும். உடனே எதிர்க்கட்சி அதனை எதிர்த்து முறியடிக்கும்.

பிறகு அந்த எதிர்க்கட்சி ஆளும் கட்சியாகவரும். ஆளும்கட்சியாக வந்த கட்சி தமிழருக்கு ஏதாவது கொடுப்பமெண்டு முன்வரும். ஆனால், அதற்கு எதிர்க்கட்சி எதிர்க்கும். இப்படி பண்டா - செல்வா ஒப்பந்தத்திலிருந்து இன்று வரைக்கும் காலம் காலமாக ஒரே நாடகம். ஒரே கதை. ஒரே கருப்பொருள்.

இப்ப ஐம்பதாண்டு காலமாக இதைப் பார்க்கிறோம். எனியும் இதைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. கிழவிகள் கேட்கும் இன்னும் எத்தினை காலத்திற்கு இந்தப் பேச்சு. எவ்வளவு காலத்திற்குத் தொடரப் போறியள்.

பிரபாகரனுக்கும் வயதுபோகுது. பாலசிங்கமும் கிழண்டிப் போகுது. அப்ப நாங்கள் எவ்வளவு காலத்திற்கு இதை இழுத்துக்கொண்டு போறது. அதுதான் கடைசியில் சிங்களக் கட்சிகளுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் சொல்லுறன். இதை இனி நாங்கள் பொறுக்கமாட்டோம்.

இந்தப் பிரச்சினை - தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தீராமல் தமிழ்மக்கள் மீதான ஒடுக்குமுறை தொடருமானால் நாம் பிரிந்துசென்று தனியாக அரசமைப்பதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.

எண்டு சொல்லிப்போட்டு, இன்னொண்டும் சொல்லிறன். சிங்கள அரசுக்கு - இந்த இறுதியான முடிவுக்கு எங்களின்ர மக்களைத் தள்ளாதையுங்கோ எண்டும் ஒரு வசனம் சொல்லுறன். அருமையான செய்தி. ஆனால் அந்த மரமண்டையில் ஏறுமோ கடவுளுக்குத்தான் தெரியும்.

நான் நீண்டநேரம் பேச விரும்பவில்லை. வழமையாக ஒரு மணித்தியாலம் பேசுறனான் பேசி முடிச்சிட்டன். ஆனால், பிரமாண்டமான சனத்திரளைப் பார்த்து, அவர்கள் மத்தியில் எனக்கு பேசக்கிடைச்ச சந்தர்ப்பத்தை தந்த உங்கள் எல்லோருக்கும் எனது அன்பு வணக்கத்தை தெரிவித்து விடைபெறுகின்றேன் என்றார்.

ராஜ் லங்கா ரூவர்ஸ்

சவுதி அரேபியா, டோகா, கட்டார்
போன்ற நாடுகளில்
உடனடி வேலைவாய்ப்புக்கள்

| | | |
|---|---|---|
| ஏ.சி ரெக்னீசியன் | 02 பேர் | 900 றியால் |
| றெவ்றிஜெரேசன் ரெக்னீசியன் | 02 பேர் | 900 றியால் |
| வெல்டேர்ஸ் (ரிக்) | 02 பேர் | 900 றியால் |
| வெல்டேர்ஸ் (ஆர்க்) | 12 பேர் | 750-850 றியால் |
| வெல்டிங் பெயின்ரர் | 02 பேர் | 750 றியால் |
| ஸ்ரோர் கீப்பர் | 02 பேர் | 900 றியால் |
| எஞ்ஜினியர் (சிவில்) | 01 பேர் | 2000 றியால் |
| எஞ்ஜினியர் (எலக்றிக்கல்) | 01 பேர் | 2000 றியால் |
| எஞ்ஜினியர் (ஸ்ரக்ஷறல்) | 01 பேர் | 2000 றியால் |

மத்திய கிழக்கு நாடுகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உங்களுடைய அனுபவ அத்தாட்சிப் பத்திரம், படம், விண்ணப்பப்படிவத்துடன் வரவும்.
மிகக் குறைந்த கட்டணத் துடன் பயணம் செய்யலாம்.

நீங்கள் நாடவேண்டிய இடம் - (சி-1873)

ராஜ் லங்கா ரூவர்ஸ்
220 A, 2 ஆம் குறுக்குத்தெரு,
ஆஸ்பத்திரி வீதி வழியாக, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.